ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧ | கர ௵ ஆடி மீ | பகுதி ௭

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

நூற்றெட்டுத் திருநாமம்

(113-ம் பக்கத் தொடர்ச்சி)

14. பிருந்தைவன லீலையுன்னிப் பிரேமசா கர நாமம்
திருந்து பெரும் அளிமூழ்கிச் செப்பினார் இராக்காலர்.
15. சுரநதிமீ தமுதலிங்கம் தோன்றிடயோ கீந்திரனார்
திருநாமம் புனைந்திட்டார் தேவதிகம் பரர் எனவே.
16. தாதி யெனும் பெயர் அளித்தார் தகைமிக்க பாபுராமர்;
(தாதி—நெருங்கி யறவாடும் உயிர் அன்பர்)
17. தாமகிழ்ந்தார் நிஷ்களங்க சந்திரப் பேர் ஒரு சமயம்.
18. குருமஹராஜ் எனுநாமம் கொடுத்திடுவர் நிரஞ்சனனார்.
19. ஒரு பிரம்ம ஸநாதனப் பேர் ஓதிடுவார் சிவாநந்தர்.
20. திரம் மிக்க சுபோத் அளித்தார் சியாமக்ஷேமங்கரிப் பேர்.
21. பிரம்மாவ தார மெனும் பெயரிட்டார் லாட்டுவென்பார்.
22. ஆசையளி கல்பதரு ஆவரென்பார் சசிமஹராஜ்.
23. காசினிக்கோர் குரு வென்பார் காளியெனும் பேரறிஞர்.
24. உலகம்மை யென்றழைப்பார் ஓங்குபுகழ் ஸரத்முனிவர்.
25. உலகுபடை நாத னென ஓதுவர்கங் காதரரே.
26. மிகு பிரக்ஞா நந்தகனர் அரிமஹராஜ் மிலைந்த பெயர்.
27. ஸகுணத்து நிர்க்குணர் ஸாரதர் சூட்டிய நாமம்.

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

புது அமைப்பா? ஒட்டுப்போடலா?

ஒரு நாட்டில் மிகுதியாயுள்ள சரக்குகளை அவற்றைப் பெறாது வருந்தும் பிறநாடுகட்குக் கொடுத்து, தன்னிடம் இல்லாதனவும் அயல் நாடுகளிடம் மிகுதியாயுள்ளனவுமான வேறு சரக்குகளைப் பதிலாக அந்நாடுகளிடமிருந்து பெறுதல் எந்த நாட்டுக்கும் அவசியமாகும்; அதுபோல, நமது நாட்டுக் கருத்துக்களைப் பிற நாடுகட்குத் கொடுத்து நமக்குத் தேவையான கருத்துக்களைப் பிறநாடுகளிலிருந்து பெறுதலும் அவசியமாம். இம்மாதிரியான 'கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் முறை'ப்படி, இந்தியா மேற்றிசை நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியன: குறித்தகாலம் தவறாது ஒரு கருமஞ் செய்தல், நகரவுரிமை யுணர்ச்சி, தொழிலில் தேர்ச்சி, எடுத்த கருமத்தைச் செய்து முடிக்கும் முறை. இக்கல்விக்குப் பதிலாக இந்தியா மேலை நாடுகட்கு அளிக்க வேண்டியவை யாவன: தனது ஞான நூல்களில் மறைந்து கிடக்கும் நிதிகளே; அதாவது, இப்பிரபஞ்சத்தின் பாரமார்த்திக அடிப்படை, எல்லா உயிர்வகைகளும் ஒன்ருந் தன்மை, மனிதனது தெய்வத் தன்மை போன்ற சில ஆதாரக் கொள்கைகளை எடுத்துக் காட்டும் ஞானக் கருவூலங்களே. இக்கருத்துக்களை இந்த நாட்டிலே பலரும் அறிவார்; அது அவர்கட்குத் தெரியாமலும் இருக்கலாம். மேலை நாடுகளிலே, விஞ்ஞான சாஸ்திரம் முன்னேற்றமடைந்து வருகிறது; வைதிக முறையிலே கட்டுப்பாடாக அமைந்துள்ள மதம் தோல்வி பெற்று வருகிறது. இவ்விரு காரணங்களாலும், முற்கூறிய கொள்கைகளைப் பெரும்பாலார் ஒப்புக்கொள்ளுதற்கு ஏற்ற நற்காலம் தொடங்கிக் கொண்டிருக்கிறது என்னலாம். அவ்வாறு ஒப்புக் கொள்ளும் போது, இப்போது மிக அருமையாகப் பாராட்டிவரும் கொள்கைகள் யாவும் முற்றுப் பெறுவதை மேலை நாடுகள் காணும். மேற்றிசையார் அறத்தில் நம்பிக்கையுடையவர். அறநெறி நல்லதாவதற்கும் அவசியமாவதற்கும் காரணம் இன்னதென்பதை வேதாந்தக் கொள்கைகள் காட்டுகின்றன. யோக்கியமாய், அன்பாய், ஒப்புரவுடையனாய் (பிறர்க்கு உபகாரம் செய்பவனாய்) இருத்தல் மேற்றிசையார்க்குப் பெரிதாகின்றது; இத்தகைய குணங்களையுடையவனை 'அயலாரிடம் அன்புடையவன்' என்று அவர்கள் கூறுதலில், ஆழ்ந்த கருத்து அடங்கியிருக்கின்றது. 'ஏன் அவ்வாறு ஒழுக வேண்டும்?' என்று அவர்களை வினவினால், 'பைபிள் அப்படிப் போதிக்கின்றது' என்பதைத் தவிர வேறு மேலான காரணம் கூற அறியார். வேதாந்தக் கொள்கைகள் அவ்வினாவிற்கு விடையளிக்கின்றன, அறத்திற்கு உறுதியான ஒரே ஆதாரம் ஆவன. இவ்வாதாரமின்றி, அறம் நிற்க இயலாது.

உயரவோ தாழவோ சுவாதீனம்

ஆனால் இந்தியாவிலுள்ள நிலையை நாம் உற்றுநோக்கும் போது நாம் காண்பது யாது? வேதாந்தக் கொள்கைகள் ஒவ்வொருவரது இரத்தத்திலும் இங்கு ஊறியிருப்பினும், அவை செயலளவாக வெளி வருதலில் பெருங்குறை உள்ளது. இந்தியா தனது கொள்கைகளை தினசரி அறவாழ்க்கையாக மாற்றுவதில்லை. அவ்வாறு ஒருநாளும் செய்ததில்லை என்பது அன்று. செய்தேயுள்ளது. பழைய காலத்தில் அவ்வாறு செய்ததுண்டு; தற்காலத்தில் சுவாமிவிவேகானந்தர் இதையே போதித்தனர். அவர் ஏற்படுத்தியுள்ள நிலையம், வேதாந்தத்தை அனுபவ நெறிக்குக் கொண்டுவரும் முறைக்கு ஓர் உதாரணமாகின்றது. தற்காலம் தொடங்கப்பட்டுள்ள இதனை நமது தேசிய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பரவச் செய்ய வேண்டியிருக்கிறது.

இதனைச் செய்வது, மேலெழுந்த பார்வைக்குத் தோன்றுவது போல அவ்வளவு கடினமானதுமன்று. இது கட்டுக்கடங்காது செல்லும் ஒரு கனவுமன்று, பூரணத்துவ போதனையுமன்று. அதை மிக எளிதாக நடைமுறைக்குக் கொண்டுவர மிகுந்த வசதி இந்தியனது ஒழுக்கத்திலே அமைந்து கிடக்கின்றது. இதைச் செய்துதான் ஆகவேண்டும் என்ற மன உறுதியைக் கிளப்பிவிட்டால், எளிதாக அக்காரியம் கைகூடும். உதாரணமாக, இந்தியனது ஒழுக்கத்தில் வளைந்து கொடுக்கும் தன்மை மிகுதியாக உண்டு. இத்தன்மையே ஒருவனை உயர்ந்த நிலைக்குச் செல்லவோ தாழ்ந்த நிலைக்குச் செல்லவோ சுவாதீனம் அளிக்கின்றது! கொள்கைகளை அடிப்படையாக்காது, வெறும் அறத்தை மட்டும் ஆதாரமாகக் கொள்ளும் ஒழுக்கம், மேற்றிசை நாடுகளிற் காணப்படுவது போலவே, திண்மை மிக்க (வளைந்து கொடுக்கும் இயல்பற்ற) ஆசாரங்களைப் பின்பற்றுதலில்தான் முடியும். இதன் பலன் யாதெனில், தனி மனிதன் இந்த ஆசாரங்கட்குக் கட்டுப்பட்டவனாகவேயிருப்பான்.

அவன் அவற்றைத் தாண்டிச் செல்லுதல் இயலாது; அவை அவனுக்குத் துணை செய்வதற்குப் பதிலாக, அவனை அடக்கியாளுகின்றன. ஆக, மேற்றிசையார் வெறும் அறத்தை விடாது பற்றிவரும்வரை இந்தியன் பெறக்கூடிய பூரண ஒழுக்கத்தை அடைய இயலாதவராவர். இந்தியா வற்புறுத்தி வேண்டுவது அறமன்று, உயர்ந்த கொள்கையே; அக் கொள்கையை முழு சுவாதீனத்தோடு செயலளவாக்குதலே பூரண நிலையை அடைய வழியாகின்றது. இந்தியா பூரணத்துவம் என்பதற்குக் குறைந்த ஒன்றினால் மனத் திருப்தியடைவதில்லை.

அங்கியின் அவசியம்

இந்தியா எந்தக் கொள்கையையும் விடாப் பிடியோடு பின்பற்றாது, வேண்டும்போது சற்று நெகிழவிடும் சுவாதீனம் பெற்றுள்ளது என்பதற்கு 'ஹோலி' திருநாள் ஒரு சிறந்த உதாரணம். (ஸ்ரீகிருஷ்ண சைதன்யரது பிறந்தநாளன்று கொண்டாடும் இந்த ஹோலிப் பண்டிகையில் சந்தோஷ மிகுதியால் குங்கும நிறச் சாயத்தைக் கரைத்து நண்பர்களின் அங்கிகளிலும் அரையாடைகளிலும் கொட்டி, அவற்றைப் பாழாக்குவார்.) மேற்றிசையான் அவ்வளவு 'பைத்திய'த்திற்கு ஆளாக முடியுமா? சாதாரண மேற்றிசையானுக்கு அங்கியென்பது மிக முக்கியமானதொன்று. 'ஹோலி' நாளன்று அங்கிகளை ஒவ்வொன்றாகக் கருத்தின்றிப் பாழாக்குவதைக் காண அவன் ஆச்சரியப் படுகிறான். அச்சாயம் வெளுத்தாலும் மாறாது என்பது அவனது காதில் விழும்போது, அவன் நடுக்கமடைகிறான். ஆடைகள் போதாத நிலையிலிருக்கும் போதும், இந்தியாவிலே வறுமை வெகு தொலை பரவியிருக்கும்போதும், ஆண்டுதோறும் அப்பழக்கம் 'ஹோலி' நாளன்று குன்றாத ஊக்கத்தோடு பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆடை சம்பந்தமாகவுள்ள இம்மனநிலை வேறுபாடு, உலோகாயதச் சார்புடைய ஒரு மனத்திற்கும், அதைத்தாண்டி அப்பால் வெகு உயரம் செல்லக்கூடிய ஒரு மனத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்கு ஓர் அறிகுறியாகின்றது. மேற்றிசையாரது மாறா உறுதியுடைய அற ஒழுக்கம் வாழ்க்கையிலே உலோகாயத மனநிலை கொண்டிருப்பதோடு நெருங்கி இணைக்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. உலோகாயதம் என்பதுதான் யாது? உலக உடைமைகளிலும், புறச் சின்னங்களிலும், வெளிப் படையான ஒழுக்க முறைகளிலும் நம்பிக்கை ஊன்றியிருத்தலே யாம். இரக்கமும் உலோகாயத மனப்பான்மை யினின்றும் எழக்கூடும். தன்னயமற்ற பணி ஈவிரக்கத்தைக் காட்டினும் உயர்ந்த ஞானநிலைக்கு உரியதாகும்.

கடன் வாங்காதே

ஆதலால், மேற்றிசை நாகரிகம் நம்மீது படையெடுத்து வரும்போது, அது உள்ளே புகுந்து நம்மைத் தாக்கட்டும் என்ற எண்ணத்தோடு நாம் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் முயற்சியில் மிக எச்சரிக்கையாயிருத்தல் அவசியம். பிறரைப்போன்று நடிப்பதனால் மட்டும் விளையக்கூடியது போராபத்தேயன்றி வேறில்லை. வெளியிலிருந்து பார்ப்பவர்க்கு மேற்றிசையாரிடத்து, மனதைக் கவரத்தக்க சில விஷயங்களும், மெச்சிப் பின்பற்றத் தகுந்தவையெனத் தோன்றும் சில பழக்கங்களும் காணப்படலாம்; அவற்றைக் கண்டதும், அப்படியே பின்பற்றி நடிப்பதாற் கேடில்லையென்று சிலர் நம்மவரே சொல்லலாம். மேற்றிசை நாடுகட்குப் பிரயாணஞ் செய்து திரும்புவர்கள் பின்வருமாறு அந்நாட்டு மக்களைப்பற்றிப் பல கதைகள் கூறுகின்றனர்; அங்கே, இழந்த குடைகள் காணப்படுகின்றன. தினசரிப் பத்திரிகைகள் வீதி மூலைகளிலே ஆளில்லாமல் விற்கப்படுகின்றன; ஓர் அணா காசை ஒரு பெட்டியில் போட்டுவிட்டுப் பத்திரிகையை மக்கள் எடுத்துக் கொள்கின்றனர். ஒருவரும் அப்பெட்டியிலுள்ள காசுகளைத் திருடுவதில்லை. பாற்குப்பிகளை வீட்டு வாசற்படியில் வைத்துச் செல்கின்றனர், வீட்டுக்காரரைத் தவிரப் பிறர் அவற்றை எடுப்பதில்லை. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பரீக்ஷைகள் நடைபெறும் போது, காவலாளரின்றி, ஒன்றிரண்டு ஆசிரியர்களுடைய மேற் பார்வையில் அவை ஒழுங்காக நடைபெறுகின்றன. மேற்றிசையாரிடம் அறவுணர்ச்சி எவ்வளவு ஊறியிருக்கிறது என்பதற்கு இவ்வுதாரணங்களைப் பலர் கூறுகின்றனர்! இந்த நாட்டில் உள்ள நிலைமையை முற்கூறிய மேலை நாடுகளின் நிலைமையோடு ஒப்பிடும் போது, நாம் காணும் வேறுபாடு எவ்வளவு மன வருத்தத்தைத் தருகிறது! நமது நிலைமை நமக்கே வெட்கமாயிருக்கிறது—என்பர் சிலர். இது உண்மைதான்; புது இந்தியா என்ற பெயர் பொருந்த வேண்டுமாயின், இவ்வுலகிலுள்ள பல நாட்டினர்க்குள்ளே நமக்கும் கௌரவமான ஓர் இடம் பெறவேண்டுமாயின், நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்வது கட்டாயம்;

அதுவும் விரைவாகச் செய்யவேண்டிய ஒன்றேயாம்.

ஆனால் சீர்திருத்தம் நமக்கு உள்ளிருந்தே எழுந்து, நமது இயல்பான வளர்ச்சியின் பயனாக உண்டாகவேண்டும்; மேற்றிசையாரது மேன்மைத் திட்டங்களைக் கண்டு அவ்வாறே புறத்துப் பின்பற்றி நடிப்பதனால் மட்டும் சீர்திருத்தம் பெற முடியாது. இந்தியா தனது உயர்ந்த கொள்கைகளைச் செயலளவாக்க வேண்டும், மேற்றிசையாரது அறநெறியைப் பார்த்து நடிப்பது மட்டும் போதாது. எல்லா உயிரும் ஒன்றே என்பது அடிப்படைக் கொள்கை; இந்தியனுக்கு இதை அறிந்து கொள்வதில் யாதொரு சிரமமும் இல்லை. பிறர்க்குத் தீங்கு செய்தல் என்பது, ஒருவன் தனக்கே தீங்கு செய்தலாகும். இக் கொள்கையை இந்தியா மறக்குமாயின், தாழ்ந்ததிலும் மிகத் தாழ்ந்த நிலைக்கு அந் நாடு அமிழ்ந்துவிடும்; அதை நினைக்குமாயின் அது தனக்குரிய முழுவளர்ச்சியை எய்தும். அது வெறும் தத்துவமயமான ஒரு கொள்கையன்று; தினசரி வாழ்விற்கு அது அடிப்படையாகக் கூடும். உதாரணமாக, தினசரி வாழ்க்கையில் ஒரு முக்கியப் பகுதியான நன்னடத்தை என்பதை எடுத்துக் கொள்வோம். நம்மொடு வாழும் மக்களிடத்தும் வேலை செய்யும் மக்களிடத்தும் நாம் கொள்ளும் தொடர்புகளின் இனிமை பெரும்பாலும் நன்னடத்தையைப் பொறுத்துள்ளது. நன்னடத்தையென்பது வெறும் மரியாதையன்று; ஒழுக்க விதிகட்குள்ளே அது அடங்கிவிடாது. நமது நடத்தை நமது சகோதர மக்களிடத்து நாம் கொள்ளும் மன நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. பிறரது பண்பையும் சௌகரியத்தையும். சுகத்தையும் நலனையும் கருதி ஏற்றவாறு நடத்தல் இதுவே நன்னடத்தை யெனப்படும். எல்லா உயிரும் ஒன்றே என்ற கொள்கையை ஒரு மனிதன் தனது நன்னடத்தைக்கு அடிப்படையாக அமைப்பானாயின், அவன் இயல்பாகவே நன்னடத்தையுடையவனாவான்.

ஓர் உண்மையான புரட்சி

இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நன்னடத்தையால் விளையும் புரட்சி, அரசியல் சம்பந்தமாகவும் சமூக இயல் சம்பந்தமாகவும் சீர்திருத்தக்காரர் தமது யுக்தியால் இதுவரை உண்டாக்கியுள்ள எதனினும் (எப்புரட்சியினும்) மிக்க அடிப்படையான மாற்றத்தை விளைக்கலாகும். நாம் பெறுவதற்கு மிக மிக ஆசைப்படும் நகரவுரிமை யுணர்ச்சி அப்போது இயல்பாகவே வெளித்தோன்றும். புத்தகசாலைகளில் உள்ள புத்தகங்கள் களவு போவதும் கிழிபடுவதும் நின்றுவிடும்; பல்கலைக் கழக மாணவர்கள் தாங்கள் விரும்பும்போது மிக்க ஆற்றல் படைத்தவர்களாயிருப்பராதலின், தாமே தமக்குரிய பரீக்ஷைகட்குச் சில மேன்மைத் திட்டங்களை ஏற்படுத்திக் கொள்வார்; அதன் பயனாகக் காவல்காப்பார் இருப்பது அவர்க்குப் பொறுக்க வொண்ணாததாகும், அவசியமற்றது மாகும்; மலக்கிடங்குகள் போன்ற பட்டணங்கள் மாறிவிடும். ஸமூகச் சீர்திருத்தங்கள் அவற்றைப்போன்று இயல்பாகவே விளையும். எல்லார்க்கும் உயிர்வாழ்தற்கு வேண்டிய கூலியும், எல்லார்க்கும் சமமான உரிமைகளும் சந்தர்ப்பங்களும் எளிதாகவும் இயல்பாகவும் அமைந்துவிடும்.

சீன தேசத்து ஞானியாரான லெயோட்ஸி என்பார் இயல்பாகவே சிறப்பை (நன்மையை) எய்துதல் என்னும் கருத்தையே தமது போதனைக்கு மையமாக்கினர். சீன மொழியிலுள்ள 'டேயோ' என்பதை விளக்க (எத்தனையோ வடமொழிகளை விளக்குவதில் ஏற்படுவது போல்) பலப்பல ஆங்கில மொழிகள் வேண்டியுள்ளன! 'பிரம்மன்' என்னும் மொழிக்கு இந்தியர் கொடுக்கும் பொருள் எல்லாம் அதற்கு உண்டு; இன்னும் அதோடு, பிரம்மஞானி யொருவன் பின்பற்றும் வாழ்க்கை நெறியையும் அது குறிக்கும். ஆதலின் 'டேயோ' என்னும் மொழி இந்தியரின் ஞானக் கருத்துக்கு ஆதாரமாகின்ற கொள்கைகள் அனைத்தையும்—அதாவது, பிரபஞ்சத்தின் ஞான ஆதாரம், பல்வகை உயிர்களும் ஒன்றாகும் தன்மை, மனிதனது தெய்வத்தன்மை யெனும் கொள்கைகளைக் குறிக்கின்றது. 'டேயோ' இக்கொள்கைகளைச் செயல் வடிவமாக்கும் முறையையும் குறிக்கின்றது.

லெயோட்ஸி என்பவர் தமது சிறு நூலொன்றில் 18-ம் அத்யாயத்தில் பின்வருமாறு குறித்துள்ளார்:

"பெருமை வாய்ந்த 'டேயோ'வை இழக்கும்போது மனிதர் அறத்தையும் பிறர்க்குரிய கடமையையும் பின்பற்றுகின்றனர். ஞானம் மதிப்பைப் பெறும்போது, உலகத்திலே பாசாங்கு பண்ணுவோர் நிறைந்துவிடுவார். குடும்பக் கட்டுகளை நொறுக்கும்போது, பெற்றோர்க்கு இயற்ற வேண்டிய கடமையும் பெற்றோருடைய சீராட்டும் அவற்றுக்குப் பதிலாக அமைகின்றன. ஒரு

நாட்டிலே சண்டை நிரம்பும் போதுதான் தேசாபிமானிகள் செழிக்கின்றனர்."

இந்த அத்யாயத்திற்கு உரைகாரர் 'ஒட்டுப் போடுதல்' எனும் தலைப்பைக் கொடுத்துள்ளார். இன்று எமக்கு இது ஒரு முக்கிய பாடமாகின்றது. நம்மைச் சீர்திருத்தும் முயற்சியில் 'ஒட்டுப் போடுத'லோடு நாம் திருப்தியடைய வேண்டாம். நற்குணங்களைப் பெறுதல் நன்மைபயக்கும் என்றோ அறநெறியென்றோ கருதி மட்டும், அவற்றை வளர்த்தல் 'ஒட்டுப்போடுதலே' யாம். அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றுதலே உண்மையான புரட்சியாகும். ('பிரபுத்த பாரத' என்னும் ஆங்கிலப் பத்திரிகையினின்றும் மொழிபெயர்த்து அளிக்கப்பட்டது.)

குருதேவர் உபதேச மணிமாலை

(144-ம் பக்கத் தொடர்ச்சி)

878—உருவத் தியானமும் சரியானது

இறைவனை யருவ னெனத்தியா னிப்ப
தேற்றதே யெனுமஃ தொன்றே
முறை, பிற வெல்லா முரண்பிழை யெனவுள்
ளெண்ணிடே லவன் வடி வுளனென்
றுறைதரு தியான முஞற்றலு முறையே,
ஒளிர்ந்திடு மிறையைநீ காணுங்
குறையுள வரையுங் கொள்கையை யொழியேல்,
குலவிடு முழுவது மப்பால். 173

(முரண்—மாறுபாடு, பிழை—தவறு. உஞற்றல்—செய்தல். குலவிடும்—விளங்கிடும்.)

900—மூன்று சரீரங்கள்

பஞ்சமா பூதத் தாகிய விம்மெய்
பயன்றரு தூலமா மென்பர்;
நெஞ்சொடு புத்தி சித்தமு மகமும்
நிகழ்த்திடு சூக்கும சரீரம்
தஞ்சமா மீசன் றரிசனத் தின்பஞ்
சார்ந்திரண் டற்றசம் யோகம்
எஞ்சற நுகருங் காரண சரீரம்
இதுபக வதிதரு வென்ப. 174

(மெய்—சரீரம். எஞ்சற நுகரும்—குறைவற அனுபவிக்கும்.)

901—மஹா காரண நிலை

இதற்குமே லாமா காரண சரீரம்
இது முதற் காரண மாகும்;
விதப்பறு தூலத் தழுந்திடு முள்ளம்
வெளிவிவ காரமுற் றிடுங்கால்;
பதற்றற வுள்ள முண்முகந் திரும்பின்
பயிலுமா காரண மடையும்,
மதர்ப்பிலந் நிலையின் மனம்பரம் பொருளில்
மாண்புற விலயமாய் விடுமே. 175

(மேலாம் மா (மஹா) காரணம் எனப்பிரிக்க. விதப்புறு—சிறப்பாகச் சொல்லப்படும். பதற்றற—பதற்றமில்லாது. மதர்ப்பு இல்—மதம் (செருக்கு) இல்லாத.)

908—குண்டலினி எழுச்சியால் ஞானம்

இயம்புகுண் டலினி யெழுந்திடி னன்றி
எழுந்திடா வான்மீய வுணர்ச்சி,
கயந்தரு மூலத் ததுவலி யற்றுக்
கழுமிடும், எழுப்பிடி லாறு
வயம்பெறு மாதா ரங்களின் வழியே
வகுத்திடுஞ் சகசிரா ரத்தில்
நயம்பெறப் புகும்பின் சமாதியுங் கூடும்,
நானிவை கண்டன னேரில். 176

(கயம்—மேன்மை. வயம் பெறும் ஆதாரங்கள்—வலிமை பெறும் ஆறு ஆதாரங்கள்.)

909—ஈசுவர அனுபவம் இருவகை

இருவகை யாகு மிறைவனை யடைதல்,
இறையுயி ரொன்றிட லொன்றும்;
மருவிடு மீசன் மங்கல வடிவ
மறைவறக் கண்டிட லொன்றும்;
பொருவற முன்னர்ப் புகன்றவந் நிலையைப்
புகரறு ஞானமென் றுணர்க;
கருவறு பத்தி நிலையென வறிக
கடையுற வுகுத்தவந் நிலையே 177

(புகர் அறு—குற்றமற்ற. கடையுற—கடைசியாக)

910—பகவானைக் காணமுடியும்

என்னருஞ் சேய்காள், இறையவன் காட்சி
எய்திட முடியுமஃ துண்மை;
என்னண மெளிதா யாமிவ ணிருந்தே
எழிலுரை யாடுகின்றனமோ
அன்னண மிறைகண் டவனொடும் பேச
லாமிவை வெறுமொழி யல்ல;
பின்னமொன் றில்லா வாய்மொழி யாகும்
பேசுவ தென் றுணர் வீரே. 178

(சேய்காள்—குழந்தைகளே. அன்னணம்—அவ்விதம். பின்னம்—மாறுபாடு. வாய்மொழி—சத்திய மொழி.)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர் மடம் 1929, மே, 9, வியாழன்

பக்தர் ஒருவர் மகாராஜருடைய பாதுகைகள் இரண்டு வேண்டுமென்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கடிதம் ஒன்று வரைந்திருந்தார். இந்தப் பாதுகைகளைப் பூஜிக்க வேண்டுமென்று அவருடைய உள்ளத்தில் விசேஷ ஆசை இருந்து வந்தது. இது விஷயமாக மகாபுருஷ மகாராஜர் இவ்வாறு கூறினார் :

"பாதுகையைப் பூஜித்தாலும் சரி, வேறு என்ன செய்தாலும் சரி, முக்கியமான விஷயம் பகவத் பக்தியே யாகும். உள்ளத்தின் தன்மையையே கவனிக்கின்றார் பகவான். அவரோ அந்தர்யாமி. எது பக்தியுடன் செய்யப்படுகின்றதோ அதுவே பகவானை மகிழ்விக்கின்றது. நீங்கள் பார்த்திருப்பீர்களே, மக்கள் மண்ணைக் கொண்டு சிவ விக்கிரகத்தை ஆக்கி, அதற்கு பூஜை செய்வதன் மூலம் பக்தியையும் விச்வாசத்தையும் அடைவதுடன், அறிவையும் பெற்று, முக்தியும் கிட்டப் பெறுகின்றனரே. மண்ணால் ஆன சிவ விக்கிரகமேயானாலும் அதற்குப் பிரேமையுடனும் பக்தியுடனும் பூஜை செய்வதால் பகவான் திருப்தியுற்றவராய் அந்தப் பூஜையைத் தாமே ஏற்றுக் கொள்ளுகின்றார். ஜடப் பொருளான மண்ணால் ஆக்கப்பட்ட அந்த விக்கிரகம் சின்மயமாக மாறிவிடுகின்றது, உயிர்த் தத்துவமுள்ளதாகி விடுகின்றது. யாவற்றிற்கும் சாரமாய் இருப்பது பக்திதான். பக்தி எங்கு உள்ளதோ அங்கு பகவத் கிருபை உள்ளதாக அறிந்து கொள்வீர்களாக. வெளிப் புறமாக நடைபெறும் இந்தப் பூஜை முதலியன யாவும் வெறும் உபாயங்களே ஆகும்."

பேலூர் மடம் 1929, மே, 13 திங்கள்

காலை நேரம். மகாபுருஷ மகாராஜர் தமது அறையில் உட்கார்ந்திருந்தார். மடத்தைச் சேர்ந்த சாதுக்கள் பலரும் அங்கு வீற்றிருந்தனர். பல விஷயங்களைப் பற்றியெல்லாம் பேச்சு எழுந்தது. சென்ற சில தினங்களாக மடத்தில் மாலை நேரத்திற்குப் பின் வகுப்பு ஒன்று நடைபெற்று வந்தது. மடத்தில் இருந்த சாதுக்களுள் கிட்டத்தட்ட எல்லோருமே அந்த வகுப்புக்கு வந்து கொண்டிருந்தனர். விவேகானந்த சுவாமிகளால் தயாரிக்கப் பட்டிருந்த மட நிர்வாக விதிகளை அந்த வகுப்பில் படித்து வந்தனர். ஒவ்வொன்றாக விதிகளைப் படித்துப் பின்னர் அவற்றைப் பற்றி விவாதித்து விளக்கம் செய்து வந்தனர். சுத்தானந்தர், விரஜானந்தர், சர்வானந்தர் ஆகிய சுவாமிகளும் வகுப்பில் இருந்த மற்றவர்களும் கடினமான கேள்விகளுக்குத் தக்க விடையளித்து வந்தனர்: இந்த வகுப்பைப் பற்றி மகாபுருஷ மகாராஜர் "இம்மாதிரி வகுப்பு நடத்துவது வெகு நல்லதாகும். இது ஒரு மடமாகும். இங்கு இரவும் பகலும் பூஜை, பாடம், தியானம், ஜபம், விவாத விளக்கங்கள் முதலியன நடந்துகொண்டே இருக்க வேண்டும்" என்று சொன்னார்.

ஒரு துறவி: இப்பொழுது மடத்தின் விதிகளைப் படித்து வருகிறோம்.

மகாபுருஷர்: வெகு நல்லதாயிற்று. விவேகானந்த சுவாமியினுடைய வாக்கு யாவும் ரிஷி வாக்காகும். அது சூத்திரம் போன்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. அவருடைய ஒவ்வொரு வாக்கினுள்ளும் எவ்வளவு கருத்தும் பொருளும் நிறைந்துகிடக்கின்றன, தெரியுமா? இந்த விஷயங்களையெல்லாம் பற்றி ஒன்று கூடி ஆராய்ச்சி செய்வதனால் பல புதிய விஷயங்கள் புலனாகும். மடத்தில் இது எவ்வளவிற்கு நடைபெறுகின்றதோ அவ்வளவிற்கு அது நல்லதாகும். ஒவ்வொருவரும் வாழ்க்கையின் இலக்ஷியத்தில் கவனம் செலுத்தவேண்டும். பகவத் பக்தி, விச்வாசம், பிரேமை, திருப்தி, தூய்மை, பிறரிடத்து அன்புணர்ச்சி—இவையெல்லாம் தான் வாழ்க்கையின் இலக்ஷியங்கள். வீடு வாசலை விட்டு விட்டு நாம் இங்கு சேர்ந்திருக்கிறோமே, இதன் நோக்கம் என்ன? ஏன் இங்கு வந்தோம், ஏன் இவ்வாறு நாம் சங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இங்கு இருந்து வருகின்றோம்? நம்முடைய தியாக உணர்ச்சி வளருகின்ற முறையில் நாம் கசிந்து மனதாரப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

பிறகு தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த துறவியொருவரை நோக்கி, மகாபுருஷ மகாராஜர், "நீர் இந்த வகுப்புக்குப் போய் வருகின்றீரா?" என்று கேட்டார்.

துறவி: இல்லை. பகல் முழுவதும் உழைப்பதின் காரணமாக மாலை வேளையில் எனக்கு வெகு களைப்பாக இருக்கின்றது. ஆதலால் என்னால் வகுப்புக்கு வரமுடிவதில்லை.

மகாபுருஷர்: அவ்வாறு வராமல் இருக்கக் கூடாது. இந்தப் பாடங்களையெல்லாம்

கேட்பது வெகு நலம் பயப்பதாகும். விவேகானந்த சுவாமிகள் தூரதிருஷ்டியுடன் கூடிய ரிஷியாவார். வருங்காலத்தில் என்ன நடைபெறும், என்ன நடைபெறாது என்பதையெல்லாம் அவர் அறிந்திருந்தார். ஆதலால் தான் அவர் இந்த மடத்தின் நிர்வாகத்தை உத்தேசித்து இந்த விதிகளையெல்லாம் ஆக்கித் தந்துள்ளார். அவருடைய வாக்குகளை நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஆராய்கின்றோமோ எவ்வளவுக்கெவ்வளவு அனுஷ்டிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமக்கு நலம் கிட்டும். நாமெல்லோருமே சாதுக்கள் ஆவோம். பகவானை அடைவது தான் நமது வாழ்க்கையினுடைய ஒரே நோக்கமாகும். இந்த ஸம்ஸார உலகம் அதி அபாயகரமான இடம். இங்கு பலவிதமான காரியங்கள், செய்கைகளுக்கு இடையில் இலக்ஷியத்திற்கேற்ப நடந்து கொள்ளுவது வெகு கடினமான விஷயமாகும். சிற்சில சமயங்களில் நெறியினின்றும் நழுவுதல் ஏற்பட்டு விடலாம். குருதேவர் கூறுவதுண்டு: உயர்ந்த வரப்புகளின் மீது நடந்து செல்லும் பொழுது குழந்தைகளின் கால் வழுக்கி விழுவதுண்டு. எந்தக் குழந்தை தானாகத் தந்தையைப் பிடித்துக் கொண்டு செல்கின்றதோ அது சில வேளைகளில் நிலைதடுமாறி வரப்பினின்றும் கீழே விழுந்துவிடக் கூடும். ஆனால் எந்தக் குழந்தையின் கையைத் தந்தை தன் கையில் பிடித்துக் கொண்டுள்ளாரோ அந்தக் குழந்தைக்கு விழுந்து விடும் பயமே இல்லை. அதைப் போலவே நாமும் இந்த ஸம்ஸாரத்தின் குறுகிய, கோணலான கடினப்பாதையின் மீது சென்று கொண்டிருக்கின்றோம். கீழே விழுந்து விடும் அபாய சந்தர்ப்பம் இருந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் குருதேவர் நமது கையைப் பிடித்துக் கொண்டாராகில் கீழே விழும் பயம் இல்லாது போகும். குருதேவர் நமது கையைப் பற்றிக் கொண்டு தான் இருக்கின்றார். இல்லாவிடில் எச்சமயத்தில் எவ்விடத்தில் நாம் வழுக்கி விழுந்திருப்போமோ, யாரே அறிவார்! ஆதலால் மெய், வாக்கு, மனம் கொண்டு நாம் இவ்வாறு பிரார்த்தனை புரியவேண்டும்: "இறைவ! நீர் எமது கையைப் பற்றிக் கொள்வீராக. நாங்கள் பலவீனர்கள். அடிக்கு அடி வழுக்கி விழக்கூடிய அபாயம் எங்களுக்கு இருந்து கொண்டேயிருக்கின்றது. ஆனால் நீர் எமது கையைப் பிடித்துக் கொண்டால் நாங்கள் பத்திரமாக இருப்போம்". குருதேவர் நம்முடைய பிராணனில் பிராணனாக உள்ள உட்பொருள் ஆவார். கசிந்துருகிச் செய்யப்படும் பிரார்த்தனைக்கு அவர் செவி சாய்ப்பார். அவர் யுகாவதார புருஷர். யுகதர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டு இறைவன் ராமகிருஷ்ண ரூபமாகத் தோன்றி வந்துள்ளார். அவர் நமக்கு நிச்சயமாகக் கிருபை செய்வார். ஏற்கனவே கிருபை செய்துள்ளார். இல்லாவிடில் அவர் ஏனோ நம்மை இங்கு கொண்டு வந்து சேர்த்துள்ளார்?

ஜ்ரும்பித யுக ஈச்வர
ஜகதீச்வர யோக ஸஹாய

(ஜகதீச்வரரான இறைவன் இந்த யுகத்தின் அவதார புருஷராகத் தோன்றியுள்ளார்) என்பது விவேகானந்த சுவாமிகளுடைய வாக்கு ஆகும். அவர் யுக ஈச்வரர் தான். இந்த யுகத்தில் யார் அவரிடம் சரணடைகின்றனரோ அவர்கள் பாக்கியசாலிகள். நாம் அவரிடம் சரணடைவோம். கை கூப்பி அவரைத் தொழுவோம்: "இறைவ எங்களுடைய தியாகமும் வைராக்கியமும் பெருகட்டும்; எங்களைப் பரிசுத்த மாக்குங்கள். எங்களுக்கிடையில் அன்பும் அனுதாபமும் ஓங்கட்டும். எங்களை நீர் உமது கரங்கள் கொண்டு பிடித்துக் கொள்ளுவீராக."

பரநிந்தை, வீண் வம்பு — இதெல்லாம் மோசமான விஷயங்கள். அவை மனத்தைத் தாழ்மைப்படுத்தி விடுகின்றன. கூடிய வரையில் நாம் பகவானைப் பற்றிய தியானம், ஜபம், பூஜை, பாராயணம் இவற்றைச்செய்ய வேண்டும். மற்ற வேளைகளில் சும்மா இருந்து கொண்டு பகவத் ஸ்மரணம் செய்யவேண்டும். இதுவே நலம் தரும் வழி. சங்கம் ஒன்றில் சேர்ந்து கட்டுப்பட்டு இருப்பது அவசியமுமாகும், உபயோகமும் உள்ளதாகும். ஆதலால் தான் விவேகானந்த சுவாமிகள் இந்த ராமகிருஷ்ண சங்கத்தை ஏற்படுத்தினார். சேவை போன்ற தூய கர்மத்தில் ஈடுபடுவதற்கும் வழி செய்து தந்தார்.

நமது சிகர ஜோதி

சுவாமி விரஜாநந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சங்கம் இரண்டிற்கும் தலைமைப் பதவியைத் தாங்கியருளிய ஸ்ரீமத் சுவாமி விரஜாநந்த மஹராஜ் பேலூர்த் திருமடத்தில் எழுபத்தெட்டாம் பிராயத்தில் 1951-ம் ஆண்டு மே மாதம் 30-ம் நாள் காலை 6-56 மணிக்குத் தமது உடல் வாழ்வை உகுத்தனர் என்ற துயரச் செய்தி எண்ணிறந்த அன்பர்களின் நெஞ்சங்களை வாடச் செய்தது. சென்ற சில ஆண்டுகளாகச் சுவாமிகளின் உடல்நிலை நலம் நலமின்மை யெனும் இரண்டிற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. சுவாமி விவேகாநந்தரின் துறவிச் சீடர்கட்குள் உயிர் தரித்திருந்தவர்களிற் கடைசியாக வாழ்வை நீத்தவர் அவரே யாவர்.

சுவாமி விரஜாநந்தர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் காளி கிருஷ்ணர் என்பது. அவர் 1873-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதியன்று ஸ்நான பௌர்ணிமை யென்னும் புனித நாளன்று கல்கத்தாவிலே மதிப்புமிக்க ஒரு காயஸ்தக் குடும்பத்திலே தோன்றினர். அவரது தந்தையாராகிய ஸ்ரீ திரைலோக்ய நாத வசு என்பார் கல்கத்தா நகரிலே உரையோங்கிய மருத்துவராக விளங்கிவந்தார். காளிகிருஷ்ணர் இளமையில் 'பயிற்சிக் கழகம்' எனும் பள்ளியிற் கல்வி பயின்றுவந்தார்; ஆங்கே படிப்பு முற்றுப் பெற்றதும் ரிப்பன் கல்லூரியை நாடிக் கற்றுவந்தனர். இக்கல்லூரியிலேதான் 'ஸ்ரீ ராமகிருஷ்ணரது கதாமிருதம்' எனும் இறவா நூலை இயற்றிய 'ம' என்பார் (மஹேந்திர நாத குப்தர்) பேராசிரியராய் அமர்ந்திருந்தனர்.

திருத்துழாய் முளைக்கும்போதே பரிமளம் வீசுவதுபோல, இளம் பருவத்தும் காளிகிருஷ்ணர் ஞான விஷயங்களிற் பேரார்வங் கொண்டவரானர். அவர்க்கு ஞான நூல்களைக் கற்பதிற் பெரும் பொழுதைப் போக்குதல் இயல்பாயிற்று; தம்மைப்போன்று ஞானச் சார்புடைய இளந் தோழரோடு கூடிப் பஜனையும் கீர்த்தனையும் பாடிக் காலங் கழித்தல் பெரு மகிழ்ச்சியை ஊட்டுவதாயிற்று. ஞான இச்சை உண்ணின்று பிடித்துந்த, அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரது இல்லறச் சீடருள் ஒருவராய ஸ்ரீ ராமசந்திர தத்தரை நாடினராக, அவரிடமிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அற்புத வாழ்வைக் கேட்டுச் செவி வாயாக அமுதம் பருகினர். அவரது உள்ளத்தே குமுறிக் கொண்டிருந்த ஞான இச்சையைக் கூர்ந்து நோக்கியறிந்த மஹேந்திர நாத குப்தர் அவ் அவாவினை உரியவாறு தீர்க்கும் கருத்துடையராகி,—அந்நாளிலே புதிதாகக் கல்கத்தாவிலே தொடங்கப்பட்டிருந்த பாரநகர் மடத்திலே வாழ்ந்துவந்த (ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய) துறவிச் சீடர்களைச் சார்ந்துய்யுமாறு காளிகிருஷ்ணர்க்குக் கூறினர்.

இதுவே காளிகிருஷ்ணரது வாழ்வை ஒரு புதிய துறையிற் செலுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது. தாயை நாடும் கன்றுபோல மடத்தை நாடிய இளைஞர் அத்தீவிர முனிவரின் கடுந்தவ வாழ்வையும், மடம் முழுதும் பரவி உள்ளத்தைக் கவியச் செய்யும் ஞான மணத்தையும், குருதேவருடைய சீடர்களின் தூய மனமார்ந்த பேரன்பையும் கண்டு, வியப்பும் ஆதாரமும் பெருகப் பெற்றனர். அச்சீடர்க்குள் ஒருவரான ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தரது ஈரமளைந்த இன் சொல்லிற்குச் சிறப்பாக வசப்பட்டு, அடிக்கடி அம்மடத்திற்குச் செல்லவும், சில சமயம் சின்னாள்கள் அங்கே தங்கவும் தலைப்பட்டனர். நாளேற ஏற, துறவி வாழ்க்கையின் மீது ஏற்பட்ட கவர்ச்சி ஓங்கி வர, 1891-ம் ஆண்டில் தமது பதினேழாவது வயதில் காளிகிருஷ்ணர் தமது இல்லறவாழ்வைத் துறந்து, பாரநகர் மடாலயத்தையே உறைவிடமாகக் கொண்டனர். இவ்வாறு துணியுங்கால் அவர் தம் இரு முதுகுரவர்களின் (தாய் தந்தையரின்) மனமார்ந்த ஆசிகளையும் பெற்றனர். அக்காலம் சுவாமி விவேகாநந்தர் ஊரூராக அலைந்து திரியும் 'பரிவிராஜக' வாழ்வை மேற்கொண்டிருந்தனர்; அவ் வாழ்க்கையின் இறுதியிலே அவர் அமெரிக்க நாடு சென்று தமது பணியை ஓரளவு நிறைவேற்றி உலகப் புகழ்பெற்றுத் தாய்நாடு மீண்டபோதுதான், 1897-ம் ஆண்டில்தான், காளிகிருஷ்ணர் அம்மாகுரவரைக் கண்டு அளவளாவும் பேறெய்தினர். பாரநகரில் நடத்திவந்த அந்நாளைய வாழ்வு முறை அவ் விளைஞர்க்கு ஞான ஊக்கத்தைப் பெரிதும் கிளர்விப்பதாயிற்று; காரணம் யாதெனின், குருதேவரின் இளஞ் சீடர்கள் அம் மடத்தில் தான் தமது ஆன்ம வலிமையையும் ஒழுக்க விழுப்பத்தையும் தூய்மையையும் தொகுக்கலானர். அம்முனிவரது பெருந்தவ வாழ்வின் கடுமையைக் கண்டும் காளிகிருஷ்ணர் சிறிதும் பின்வாங்காது, தமது உடலையும் உள்ளத்தையும் மடத்துத் தொண்டுக்காகவே அர்ப்பணம் செய்தார். குருதேவரின் நேர் சீடர்கட்கு மனமார அடிமை செய்யும் இணையற்ற உரிமையைப் பெறவே,

அப்பெரியாரும் பேரன்போடு அவரது ஞான வாழ்வினைத் திருத்தி உருப்படுத்தி வரலானர். பாரநகர் மடத்துக்கு இவரோடு வரும் பழக்கம் பெற்றிருந்த தோழரும் நாளடைவில் ஒவ்வொருவராக மடத்தைச் சேரலானர்; பிற்காலத்தே அவர்கள் விமலாநந்தர் சுத்தாநந்தர், பிரகாசாநந்தர், போதாநந்தர் ஆத்மாநந்தர், நிர்ப்பயாநந்தர் எனும் நாமங்களோடு துறவிகளாகித் திகழ்ந்தனர். 1892-ம் ஆண்டில் காளிகிருஷ்ணர் 'தூய அம்மை' யாராகிய சாரதா தேவியாரால் தீக்ஷை யருளப் பெற்று, பிருந்தாவனத்திலே ஸ்ரீமத் சுவாமி பிரேமாநந்தரோடு கூடியிருந்து சிறிது காலம் ஞானசாதனம் பழகிவந்தார்.

சுவாமி விவேகாநந்தர் 1897-ம் ஆண்டில் மேற்றிசையினின்று மீண்டபின், காளிகிருஷ்ணரது பக்குவத்தைக் கண்டு மகிழ்ந்து, அதே ஆண்டிலே அவரைத் துறவுநெறியிற் புகுத்தி 'சுவாமி விரஜாநந்தர்' எனும் நாமத்தையும் அளித்தார். சிறிதுகாலம் சென்றபின் சுவாமி விவேகாநந்தரது ஆணைக்கிணங்கி, அவரது போதனைகளையும் சிறப்பாகப் பெற்று, கிழக்கு வங்காளத்திலுள்ள டாக்கா முதலிய ஒரு சில இடங்கட்குப் பிரசாரவேலைக்காகச் சென்றுர்; தியோகர் எனும் ஊரில் பஞ்சக் கஷ்ட நிவாரண வேலையை அமைத்து வெற்றிகரமாக நடத்தினர். சுவாமி விரஜாநந்தர் சுவாமி விவேகாநந்தரது அருகிருந்து அவரது திருமேனிக்குத் தொண்டுபுரியும் பாக்கியத்தையும் பெற்றுர்; ஒருமுகப்பட்ட பக்தி சிரத்தையோடு பணியியற்றிவந்த சீடரது பான்மையைக் கண்ட அக்குரவரும் சிறப்பாக மகிழ்வெய்தினர்.

1899-ம் ஆண்டின் நடுவே சுவாமி விவேகாநந்தர் இரண்டாம் முறை மேலை நாடுகட்குச் செல்ல நேர்ந்தது. அவ்வமயம் அப்பெரியாரின் புத்திமதிக் கிணங்கி, சுவாமி விரஜாநந்தர் இமயமலையின் உட்பிரதேசத்தில் மாயாவதியிலே அப்போது புதிதாகத் தொடங்கியிருந்த 'அத்வைத ஆசிரம'த்திலே தொண்டுபுரியச் சென்றுர். அப்போது அவ்வாசிரமம் ஆரம்ப நிலையிலிருந்ததுபற்றி, அவரது துணை ஆசிரமப் பணியை ஒழுங்குபடுத்த முயன்ற ஸேவியர் தம்பதிகட்கு அரும்பயன் தருவதாயிற்று. இதற்கிடையே சுவாமி விவேகாநந்தரின் மிகப்பிரிய மேற்றிசைச் சீடர்களுள் ஒருவரான ஸேவியர் என்னும் புருடர் 1900 அக்டோபர் 28-ல் மண்ணக வாழ்வை விட்டு விண்ணகம் புகுந்தமையால் ஆசிரமம் பெருந்துயரம் எய்தியிருந்தது. சுவாமி விவேகாநந்தர் அமெரிக்காவினின்றும் இரண்டாம் முறை மீண்டதும் ஸேவியரின் நாயகியார்க்கு ஆறுதல் அளிக்கும் கருத்தோடு மாயாவதிக்கு வர விரும்பினர். அப்போது குளிர் கால மாதலின், மாயாவதிக்குச் செல்லும் பாதை பிரயாணத்திற்கு உதவாத நிலையில் இருந்தது; பிரயாண வசதிகள் சற்றும் இல்லாமையே அதற்குக் காரணமாயிற்று. மாயாவதிக்குப் புகைவண்டியிலிருந்து போகும் பாதையில் 65 மைல் தூரம் பிரயாணம் செய்வது மிக வருத்தம் விளைப்பதாயிருந்தது. சுவாமி விவேகாநந்தரையும் அவருடன் வந்தவரையும் காத்கோடத்திலிருந்து மாயாவதிக்குப் பத்திரமாக அழைத்து வந்து சேர்க்கும் பொறுப்பை சுவாமி விரஜாநந்தரே ஏற்க நேர்ந்தது. கடுங்குளிரையும் மதியாது, சுவாமி மாயாவதியினின்றும் புறப்பட்டு, இரவும் பகலும் நடந்து இரண்டே நாளில் அத்தனை தூரத்தையும் கடந்து, மாயாவதிக் குக் கூட்டத்தாரை அழைத்து வருதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும் பொருட்டு, உரிய காலத்தில் காத்கோடம் வந்து தயாராயிருந்தார். சுவாமி விவேகாநந்தர் இதைக் கண்டு பெருமகிழ்ச்சி கூர்ந்து 'இவன் உண்மையாகவே எனக்குத் தகுந்த சீடன்!' என்று புகழ்ந்தார். சுவாமி விவேகாநந்தர் மாயாவதியினின்றும் மீளும்போதும் பிலிபித் என்னும் இடம்வரை அவர்க்குத் துணையாக வந்தார்; ஆனல் அந்தோ! அதுதான் இறுதியாக இருவரும் ஒருவரை யொருவர் கண்ட சந்தர்ப்பமாக முடிந்தது. எவ்வாறெனில், பின்னர் 1902-ம் ஆண்டில் சுவாமி விவேகாநந்தர் பேலூர் மடத்திலே திருமேனியை உதறியெறிந்தபோது, சுவாமி விரஜாநந்தர் ஆமதாபாத் பக்கம் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

தீவிரமான குருபக்தி வாய்க்கப் பெற்றிருந்த சுவாமி விரஜாநந்தர்க்குத் தமது குருவின் அந்திம தசையில் அருகே யிருக்கும் பாக்கியம் பெருது போனமைபற்றி எழுந்த துயரம் பொறுக்க வொண்ணுததாயிற்று. ஆதலின் அத்துயர நெருப்பை ஒருவாறு அவிக்கக் கருதிய அவர் சுறுசுறுப்பான வாழ்வினின்றும் ஓய்வுபெற்று, மூன்று ஆண்டுகளைச் சாஸ்திரக் கல்வியிலும், தியானத்திலும், சுவாமி பிரம்மாநந்தர் சுவாமி துரியாநந்தர் எனும் இரு பெருங் குரவர்கட்குத் தொண்டு செய்வதிலும் கழிக்கலானர். 1904-ம் ஆண்டில் அவரை அமெரிக்காவிற்கு அனுப்புவதாக ஒரு யோசனை பிறந்தது; எனினும், சுவாமிக்கு இந்தியாவிலே இருந்து தவம் பழகும் விருப்பம் இருந்தமையின், அது நிறைவேருது போயிற்று.

1906-ம் ஆண்டில் சுவாமி சொரூபாநந்தர் காலமானபின், சுவாமி விரஜாநந்தரையே மாயாவதி ஆசிரமத்தின் தலைவராக நியமித்து அந்நிலையத்தை ஓங்கி வளரச் செய்யும் பொறுப்பையும் அதிகாரிகள் அவர்க்கே அளித்தனர். எட்டு வருட காலம் அப்பதவியைத் தாங்கிவந்தனர். அவரது வாழ்க்கையிலே ஆக்கப் பணிகளை மிகுதியாக இயற்றிய பகுதிகளில் அதுவும் ஒன்றாயிற்று.

மாயாவதியில் அவரது பணி பலவகைப் பட்டதாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பத்திரிகையான "பிரபுத்த பாரத"த்திற்கு ஆசிரியராயிருந்தது மன்றி, மேலைநாட்டினரும் கீழை நாட்டினருமான சீடர்களால் நான்கு தொகுதிகளாக வரையப்பட்ட சுவாமி விவேகாநந்தரது மாபெரும் வரலாற்று நூலை அவரே ஆராய்ந்து பண்படுத்த வேண்டியதாயிற்று. "சுவாமி விவேகாநந்தரின் நூல்கள் முழுமையும்" என்ற தொகுதிகளைச் சேகரித்தலும், ஆராய்ந்து செப்பனிடலும், அச்சிடலும் ஆகிய பணியே அவரது ஆற்றலுக்கும் நுண்ணிய அறிவுத் திறமைக்கும் நிலையான நினைவுச் சின்னமாகவும் சான்றாகவும் திகழ்வதாகும்

சுவாமி விரஜாநந்தர் 1913-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் தேதியன்று அத்வைத ஆசிரமத் தலைவர் பதவியை நீத்தனர்; ஆயினும் தாம் தொடங்கிய நூற்பணியை முற்றுவித்தற்காகப் பின்னும் ஓர் ஆண்டு அங்கே தங்கலானார். தமது வாழ்வைத் தனிமையிற் கழித்தற்கு ஏற்ற ஓர் அமைதியான ஒதுக்கிடத்தைப் பெறத் தவித்தவராய், 1925-ல் இமய மலையில் சியாமளதலம் என்னும் இடத்தில் ஒரு புதிய ஆசிரமத்தை சுவாமி தொடங்கலானார். இந்த ஏகாந்தத் தலத்திலே பத்து ஆண்டுகளைத் தனிமையிலும் கல்வியிலும் நீண்ட தியானத்திலும் கழிப்பாராயினர். சியாமள தலத்தே அவர் வாழ்ந்த வகை எளிய வாழ்வுக்கும் கடுமையான அடக்கத்திற்கும் தவத்திற்கும் ஒரு வடிவமாய் இலகியது. தமது வாழ்க்கையிற் சிறந்த பகுதியை இங்கு தியானத்திலும் சிந்தனையிலும் கழித்தமையால் சுவாமிக்கு இந்த ஆசிரமத்திலே சிறப்பாகப் பிரியமும் உண்டு. 1926-ல் இந்த ஆசிரமப் பணிக்குத் துணையாக ஒரு ஸேவாசிரமமும் ஆரம்பமாயிற்று. தமது ஆசிரமத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் வாழ்ந்த ஏழமைப்பட்ட கல்லாத மக்கட்கு மருத்துவப் பணி செய்வதின் அவசியத்தை சுவாமி உணர்ந்து மனங்கசிந்தமையே . அதற்குக் காரணம். உண்மையாகவே 1926-ம் ஆண்டு தொடங்கிய பின்பெல்லாம் மனிதனுக்குத் தொண்டு செய்யும் அவா அவரிடம் ஓங்கலாயிற்று; அதனால் ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும் சங்கமும் ஆற்றிவந்த நன்முயற்சிகளில் அவர் மேலும் மேலும் ஊன்றிய கருத்துடையரானார். 1934-ம் ஆண்டில் அவர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் சங்கம் இரண்டிற்கும் காரிய தரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அது முதல் தீவிரமான உழைப்புப் பகுதியொன்று அவரது வாழ்க்கையில் மீண்டும் தொடங்கலாயிற்று. 1938 மே மாதத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் சங்கம் இரண்டிற்கும் உப தலைவரானார்; அவ்வாண்டின் இறுதியில் சுவாமி சுத்தாநந்தர் திருநாடு புகுந்தபோது, அவரே தலைவராக அமர்ந்தார்.

சுவாமி விரஜாநந்தரது தலைமையின் கீழ் இருந்த காலத்து ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் பரப்பிலும் பணிவகைகளிலும் வியத்தகும் (ஆச்சரியப் படத்தக்க) விரிவையடைந்தது. அவர் வீசிய ஞானத்திறனும் அவரது சாந்தி நிறைந்த இயல்பும், குழந்தை போன்று மகிழ்ச்சியும் எளிமையும் வாய்ந்த தன்மையும் ஆயிரக்கணக்கான அடியார்களை—இளைஞரையும் முதியோரையும், ஆடவரையும் மகளிரையும் கவர்ந்தன; ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினைச் சார்ந்த பல இளைஞரின் வாழ்க்கைகளை உருவாக்கின. ஒரு முறைக்குமேலே சுவாமி இந்தியாவிற் பற்பல இடங்கட்கும் பிரயாணம் செய்தனர். ஆயிரக்கணக்கான ஆடவரும் மகளிரும் அவரது புத்திமதியாலும் ஒழுக்கத்தின் மேன்மையாலும் ஞானவிழிப்பும் ஞானவாழ்க்கையில் உரனும் பெற்றனர். தீவிர முயற்சியும் தீவிர தியானமும் ஒருங்கே இணைந்துள்ள நிலைக்கு—அதாவது சுவாமி விவேகாநந்தரின் ஞான இலக்ஷியத்திற்கு ஓர் ஆச்சரியமான உதாரணமாக சுவாமி திகழ்ந்தனர் என்பது மெய்யேயாம்.

அவர் சீடர்க்கருளிய உபதேசம் பெறற்கரும் ஞான நிதியே யாகும்; 'பரமார்த்தப் பிரசங்கம்' எனும் பெயரொடு வங்காள மொழியில் அது வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு அமெரிக்காவிலிருந்து 'பரம இலக்ஷியத்தை நோக்கி' எனும் தலைப்பொடு சென்ற ஆண்டு வெளிவந்தது.

சுவாமியின் அந்திம நாட்கள் பெரும்பிணியிலே கழியலாயின. அவரது உடலின் கண் இருந்த கோளாறுகள் அக்காலம் மல்கலாயின எனினும், அவஸ்தை எவ்வளவினதாயினும், அதனை மலையனைய பொறுமையொடும் சகிப்போடும் பொருட்படுத்தாதிருந்த தீரம் அவரிடம் குடி கொண்டிருந்த

மையின், அவர் துன்புற்றதை எவரும் அறிய மாட்டாராயினர். மே மாதம் 30-ம் தேதி காலை நான்கு மணிக்கு அவரது உடல் நிலை மிகமிகக் கவலைக்கு இடமாயிற்று. சன்னியாசிகளும் பிரம்மசாரிகளும் அனைவரும் கூடி, ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருநாமத்தை ஓதத் தொடங்கினர். 6 மணி அடித்து 56 நிமிஷம் ஆனபின் சாந்தியோடு சுவாமி மஹாசமாதியெய்தினர். அங்கே கூடியிருந்த அடியார்கள் ஆயிரவர் மலர்க்காணிக்கைகளை வழங்கினர். மாலை சுமார் 6 மணிக்கு சுவாமியின் திருமேனி கங்கைக் கரையருகே மடத்தில் தகனமானபின் எஞ்சியவை தூய கங்கையில் உய்க்கப்பட்டன. "ஜே குரு மஹராஜ்ஜிகி ஜே" என்று அன்பர்கள் செய்த முழக்கம் பேலூர் மடத்தில் எதிரொலியுண்டாக்கிற்று. சுவாமி விரஜாநந்த அடிகளது பிரிவால் அன்பர்கள் மதிப்பரிய வழித்துணையை இழந்தனர்; உலகம் ஒரு பெரும் ஞானியாரை இழந்தது. "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே, உடம்பொடு உயிரிடை நட்பு".

மனிதனும் உடம்புகளும்

A. C. (இலஞ்சி)

ஒவ்வொரு மனிதனுக்கும் பல உடம்புகள் உள்ளன என்பது நம்மவர் பலர் அறிந்திருப்பர். அவற்றுள் அன்னமய உடம்பும் பிராணமய உடம்பும் பெரிதும் சட இயற்கையுடையன; மனோமய கோசத்தில் விலங்கியற்கையும், மனித இயற்கையும் நிறைந்திருக்கும். இவற்றிற்கு மேற்பட்ட உடம்புகள் தெய்வீக இயற்கையைப் படிப்படியாகக் காட்டத் தொடங்கும். வெறுஞ் சோம்பேறியாய்க் கையில் கிடைத்ததை அருந்திக்கண்ட இடத்தில் உறங்கிக் கிடப்பது சட இயற்கை. உண்டு, உடுத்து, உறங்கியும், பயத்திற்கும் காம இச்சைக்கும் உட்பட்டு அந்த அனுபவங்களுக்காகப் பணந்தேடி உழைப்பதும், விலங்கியற்கை. நன்மை தீமையறிந்து, நன்மையை நாடித் தீமையை விலக்கி, உடலையும் உள்ளத்தையும் ஒருவாறு அடக்கியாள்பவனிடத்து மனித இயற்கை தலை எடுக்கிறது—பகுத்தறிவே மனிதனை விலங்கை விட்டுப் பிரிப்பது. உரிய சாதனங்களால் மனிதன் உடலையும் உள்ளத்தையும் நினைத்தபடி ஆட்டுவிக்கும் திறமையையும்; அவற்றின் ஆற்றலைப் பூரணமாய் வெளிப்படுத்தும் வல்லமையையும் எய்தும் போது, அங்கு மனித இயற்கை முற்றுப் பெறுகின்றது. காமம், வெகுளி, மயக்கமும், யான் எனதென்னும் செருக்கும் அறவே ஒழிந்து, அனைத்துயிரிடத்தும் அருட் செயலாற்றும் பான்மையுடையோரிடத்து தெய்வீக இயற்கை தலையெடுத்துக் காட்டும். ஜீவத் தன்மை நீங்கும்போது சிவத்தன்மை உண்டாகும் என்றது இந்த முடிந்த நிலையையேயாம். இவற்றுள் கீழான இயற்கை அடங்கும்போதே அதற்கு மேற்பட்ட இயற்கை விருத்தியாகத் தொடங்கும்; ஏனெனில் ஒளியும் இருளும் ஒரே இடத்தில் தங்குவதில்லை.

இனி, மனிதன் தரையில் வண்டியோட்டுகின்றான், தண்ணீரில் கப்பலோட்டுகின்றான், ஆகாயத்தில் விமான மோட்டுகின்றான், அவன் மாத்திரம் அதே மனிதனாக இருக்கின்றான். அம்மாதிரியே அவனுக்கு ஒவ்வொரு உலகத்தில் வேலை செய்வதற்கு ஒவ்வொரு தனிக்கருவியாகிய உடம்பு அமைந்திருக்கின்றது; ஆயினும் அவன் அவற்றினின்றும் வேறாகவேயிருக்கின்றான்; உடம்புகள் எத்தனை மாறினாலும் அவன் மாத்திரம் அதே மனிதனாகவே இருக்கின்றான். இந்த உண்மையை அறியாமல் தன்னைத்தன் உடம்புகளாகக் கொள்வது, ஒருவன் அணிந்திருக்கும் உடுப்பை அம்மனிதனாகவோ, அவன் குடியிருக்கும் வீட்டை அம்மனிதனாகவோ, கொள்வது போன்று மூடத்தனமானதே. ஆனால் இவ்வுடம்பை விட்டு நீங்கி நின்று நாம் பெரும்பாலாருக்கு வேலை செய்ய முடியாமையால், இந்த உடம்பே நாமென்று நினைக்க ஏது உண்டாகின்றது. ஆயினும் ஆண்டவனைத்தேடி ஆலயந்தொழக் கூடிய பக்குவம் வந்தவர்கள், இந்த மயக்கத்தை சுருதி, யுக்தி, அனுபவங்களைக் கொண்டு தம்மால் கூடியவரை ஆராய்ந்து, தம்முடைய இயற்கையும் தமது பலவேறு உடம்புகளின் தன்மைகளையும் தெரிந்து, அறிவினாலாவது தம்மை எப்போதும் ஆன்மாவாகக் கருதும் பழக்கத்தை அடைய முயலல் வேண்டும். ஆலய வழிபாடு செய்யும் போதும், அன்றாடந் தியானம் பண்ணும் போதும், இப்பழக்கத்தைச் சாதகஞ் செய்தல் வேண்டும். இப்பழக்கம் முதிரமுதிரப் புறவுலக நிகழ்ச்சிகள் அவரை அதிகம பாதிக்காது போம்; அப்போது அவருக்கு ஒரு மனச் சாந்தியும், வாழ்க்கை இடைஞ்சல்களைச் சகிக்கப் பொறுமையும், ஓளவிற்குப் புடை பெயரா

நிலைமையும் ஏற்படும். சாதாரண மக்கள் சமுசாரக் கடலில் தத்தளிக்கும் போது இவர், காலின் கீழ் ஊன்று பாறையுடைய வர் இடுப்பளவு நீரில் நிற்பது போலத் தம் மைச் சமாளிக்க வல்லவராயிருப்பர். தம்மை யும் உடம்புகளையும் பிரித்தறியும் பழக்கத்தா லேற்படும் குணங்களே இவை.

மேற்சொன்ன உடம்புகளெல்லாமே, உப யோகத்தைப் பொறுத்து ஆன்மாவிற்கு உத வுங் கருவிகளாகவோ சிறைக் கூடுகளா கவோ அமைந்து விடலாம். அவை எவ்வள வுக் கெவ்வளவு வளர்ச்சியுற்று மேன்மை யடைந்திருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ் வளவு அவன் தன்னுடைய அறிவு, இச்சை, செயல்களையும், அன்பு ஆற்றல்களையும், கூடு தலாக உலகில் தொழிற்படுத்தக் கூடியவனு வான். அவை உயர்ந்து பண்பட்டவையா யிருப்பின், அங்கு வீணாகானத்தையும் ஆன் மாவின் ஜங்கார சுருதியையும் எழுப்பித் தனக்கும் பிறர்க்கும் அவன் ஆனந்தத்தை விளைவிக்கலாகும். அன்றிக் கீழ்த்தரமான உடம்புகளாயின், அங்கு வில்லோசையும் பறையோசையும் பம்பைமேளமும் வெளிப் படுமே தவிர இனிமையொன்றும் அங்கு பிறக்காது. அப்போது அவை அவனைச் சிறை செய்யுங் கூடுகளாகவே இருக்கும். இது அப்பிறப்பிற்கு மாத்திரமல்ல, ஏனெனில்

"உறங்குவது போலுஞ்சாக்காடு, உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு."

உறங்கி விழித்தவன் வேற்று மனிதனுக எழுந்திருப்பதில்லை, முன்னைய மனிதனுகவே இருப்பான். அம்மாதிரியே இறந்தவன் திரும்பப் பிறக்கும்போது பழைய இயற்கை கள் மாறியவனுகப் பிறப்பதில்லை. அது, ஒரு உடையைக் களைந்துவிட்டு வேறு உடை உடுத்தியவன் வெளித்தோற்றத்தில் வேருகக் காணப்படினும், உள்ளிருப்பவன் அதே மனிதனுக இருப்பது போன்றதே. மனிதன் பிறப்பதாகவும் இறப்பதாகவும் தோன்றினு லும், உண்மையில் ஆன்மாவின் வாழ்க்கை ஒன்றேயாகும்; ஒவ்வொரு பிறப்பும் அதில் ஒவ்வொரு நாளேயன்றி வேறில்லை. அதனுல் அவன் இறக்கும்போது இருந்த உடம்பின் தன்மைகளே, அவனுடைய அறிவு இச்சை களின் நிலைமைகளே, அடுத்த பிறப்பில் முன் னிருப்பாக அதாவது பழைய முதலிருப்பாகத் தொடர்ந்து வரும். அங்ஙனம், ஒருவனு டைய முற்பிறப்பு, இப்பிறப்பு, மறு பிறப்பு எல்லாம் காரண காரிய முறையாக ஒன்றோ டொன்று இணைந்து நிற்கும் இயற்கை விதி களை அறிந்து, அவரவர் இன்று நிற்கும் நிலை யிலேயே தம்தம் தூல சூக்கும உடம்புகளைப் பண்படுத்த முயற்சிப்பதே அறிவுடைமை. அவை பண்படாதவரை நமக்கு நல்வாழ்வோ இன்ப வாழ்க்கையோ எய்தாதாகையால், அவ்வேலையை அன்று செய்வோமென்று அசட்டையாயிருந்து விடாமல், இன்றே இப் போதே தொடங்குவதே அறிவுடைமையா கும். இவ்வுலகில் மண், பெண், பொன்னு கிய உடைமைகள் ஒரு சிலருக்கு ஏற்படுவ தும் ஏனையோருக்கு அமையாது போவதும் நாம் யாவரும் காண்பது. மேற்சொன்ன உடம்புகளாகிய உடைமைகளோ இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுத்திருக்கும் நிலபுலங்களாகும், தனிப்பட்ட சொத்தாகும். அவற்றிற்கு வளமிடுவதும் அவற்றைப் பயிரி டுவதும் அவரவர் கையிலே உள்ளன. அவற் றின் பலன்களும் அவரவருக்கே உரிமை யாகுமின்றி வேறு எவராலும் பறிமுதல் செய்யக் கூடியவையல்ல. அதனுல் அவற்றை விருத்தி பண்ணுவதில் கண்ணுங்கருத்துமா யிருப்பவன், அங்கு ஆழ்ந்து மறைந்து கிடக் கும் புதையல்களை அனுபவிக்க வல்லவனு வான். அவற்றின் துணைகொண்டு பேரின் பத்திற்கு அடி கோலியவனுவான்.

இன்பமாலை

(157-ம் பக்கத் தொடர்ச்சி)

17. கனிவ ருஞ்சுக மருவு வல்லியொர்
கனக மாய்வரி னனையதாம்
அளித ருந்திரு வடிவ மாய்மிக
அவிரு மெல்லிய லனையவள்
களித ரும்பல வுலக மேவிய
நலம வட்பெறு நலமதே
இளிவு றுந்துயரிசைப ராபரை
யியல்பெ ணுததொர் குறையதே.

(பொ-ரை) மேன்மேலும் மகிழ்ச்சி உண் டாவதற்குக் காரணமாகிய இன்பம் பொருந் திய (ஒரு) கொடியானது ஒப்பற்ற பொன் ஞய் அமையுமாயின், அக்கொடி போல்வ தாகிய அருள் பொருந்திய அழகையுடைய வடிவமே தன் வடிவமாய் விளங்கும் மென் மையான இயல்பையுடைய அத்தேவி (உல கங்களுக்கு எல்லாந்) தாயாவள்; பெருமை

பொருந்திய பலவுலகங்களும் அடைந்த நன்மை அவளால் பெற்ற நன்மையே யாம்; இகழ்ச்சி பொருந்திய துன்பமானது, சொல்லப்படும் அப்பராசக்தியின் நன்மையைக் கருதாமையாகிய ஒரு குற்றத்தால் வருவதே யாம்; எ-று.

[களி—மகிழ்ச்சி. வல்லி-கொடி. கனகம்-பொன். அனையது—அதனை யொத்தது. அளி—அருள். அவிரும்—விளங்கும். அனையவள்—தாய். நளி—பெருமை.]

18. மதிமு டித்தவள் புரமெ ரித்தவள்
வறிய பன்னக முடையவள்
கதித ருந்திரு வடியி லிட்டன
கமழு மாமல ரனையவும்
நதிவ ருஞ்சடை யுடைய னேமுத
னவிலு மூவர்க டலையவாம்
பதித ரும்பிற விபுதர் தாளிணை
பரவி லென்பயன் வருவதே.

(பொ-ரை) சந்திரனைச் சடையில் முடிந்தவளும் திரிபுரங்களை எரித்தவளும் (விலையுயர்ந்த ஆபரணங்களின்றி) வறியனவாகிய பாம்புகளை ஆபரணங்களாக அணிந்தவளும் ஆகிய தேவியின், சிறந்த பாதங்களில் வழிபாட்டின்கண் இடப்பட்டவையாகிய மணங் கமழுஞ் சிறந்த மலர்கள் எல்லாம் கங்கை பொருந்திய சடையையுடையவனாகிய சிவபெருமான் முதலாகச் சொல்லப்படுகின்ற மும்மூர்த்திகளின் தலைகளினிடப் பட்டனவாகும்; நிலை பெற்ற (தங்கள் தங்கள் உலகங்களுக்கு மட்டுமே உரிமை பெருந்திய வர்களான) பிற தேவர்களின் இருபாதங்களையுந் துதித்தால், என்ன பயன் உண்டாவது? எ-று.

[மதி—சந்திரன். பன்னகம்—பாம்பு. எனையவும்—யாவும். நவிலும்—சொல்லப்படும். மூவர்—திரிமூர்த்திகள். விபுதர்—தேவர். தாள்—பாதம்,]

19. அணுவு மாகிய வணும கத்ததெ
னளவு மாகிம னுடலகத்(து)
அணுகு மாவியும் அதன தாவியு(ம்)
அகிலம் யாவையு மளவற
நணுகு செம்பொரு ணிலையு மாகிய
நளின வல்லியெ னுமைபுகழ்
நுணுக வெண்ணிடு முதிய மாமறை
நுவல்வ தன்னவள் வடிவமே.

(பொ-ரை) அணுவாகியும் அவ்வணு மகத்தாயிற்று என்று சொல்லும் பேரளவாகியும் உடம்பினகத்துப் பொருந்திய நிலைபெற்ற உயிரும் அவ்வுயிர்க்குயிரும் உலகங்கள் யாவும் அளவின்றிப் பொருந்தும் பரம்பொருணிலையும் ஆகிய நளின வல்லியென்னும் (என்னுடைய) உமாதேவியின் புகழை நுட்பமாக ஆராயும் பழைய சிறந்த வேதம் சொல்வது அவளுடைய திருவடிவத்தையே யாகும்; எ-று.

[அணுவும் ஆகி அணு மகத்தது என் அளவும் ஆகி மன் உடலத்து—எனப் பிரிக்க. மன்—பொருந்திய. நளினம்—தாமரை. நுணுக—நுட்பமாக. மா—சிறந்த. மறை—வேதம். நுவல்வது—சொல்லுவது.]

20. புலவ ருக்குயர் திருவ ளிப்பவள்
புனித ருக்கருள் புரிபவள்
இலவ ருக்கற மொடுபொருட்சுவை
யிலகு மின்பமு மீபவள்
சலவ ருக்கிலை யெனம றுக்கிலள்
சகல ஞானப ராபரை
நிலவ ருக்கர்க ளொளிர நின்றரு
ணிமலை சுந்தரி விமலையே.

(பொ-ரை) எல்லா ஞானங்களையும் ஒருங்கே யுடைய பராபரையும் விளங்கும் சூரியர்கள் ஒளிரும்படி அருள்புரியும் நிமலையும் சுந்தரியும் விமலையும் ஆகிய தேவி, புலவர்களுக்கு மிக்க செல்வத்தைக் கொடுப்பவள் (தேவர்களுக்கு உயர்ந்த வானியற் செல்வங்களையும் வீடுபேற்றையும் அளிப்பவள்); தூய்மையுடையவர்களுக்கு அருள் செய்பவள்; இல்லறத்தார்க்கு அறமும் செல்வத்திரளும் விளங்கிய இன்பமும் அளிப்பவள்; வஞ்சகர்க்கும் (யாதும்) இல்லையென்று கூறி மறுக்கமாட்டாள்; எ-று.

[புலவர்—பண்டிதர், தேவர். புனிதர்—தூயவர். இல்வர்—இல்லாதவர், (இல் அவர்) இல்லறத்தவர். சலவர்—வஞ்சகர். அருக்கர்கள்—சூரியர்கள்.]

21. இனிய வங்குச நெடிய பாசமு
மிளந றுமலர் கழையிவை
கனிய ளாவிய விதழி நாணகை
கருது மின்னில வனையவள்
பனிய ளாவிய நதிமு டித்தவள்
பரவு செங்கையி னுடையவள்
மனிய நூன்மணி யபய மோடொளிர்
வரத மும்பெற லுரியளே.

(பொ-ரை) இன்கனியின் தன்மை கலந்த இதழ்களை உடையவளும் புதிய நகையானது கருதப்படும் இனிய நிலவை யொக்க இருப்பவளும் குளிர்ச்சி பொருந்திய கங்கையைச் சடையில் முடித்தவளும் ஆகிய தேவி, இனிய அங்குசமும் நீண்ட பாசமும் இளைய தேன் பொருந்திய மலரும் கரும்பும் ஆகிய இவற்றைத் துதிக்கப்படும் அழகிய கையில் உடையவள்; பொருந்திய எடு படிகமணி அபயமுத்திரை விளங்கும் வரதமுத்திரை

என்னும் இவற்றையும் பெறுதற்கு வலிமை பூண்டவள் ஆவள்; எ-று.

[நறு—தேன். நாள் நகை—புதிய சிரிப்பு. அனையவள்—ஒத்தவள். பரசு—மழுவாயுதம். மனிய—(மன்னிய) நிலைபெற்ற. நூல—புத்தகம். மணி—படிக மணிமாலை. இதழி—இதழ்களை யுடையவள்.]

22. மருவு சங்கொடு பரிதி வாள்சிலை
மலைவில் தண்டிவை கரகமும்
பொருவி லாததொர் மழுவு டுக்கொடு
புகலு மக்கினி கலைகளும்
ஒருவி லாதவ ளுணரு முத்திரை
யொளிரு மங்கர மலரினள்
உருவி லாதவ ளெனினு மிவ்வுல
குருவி னேடெளி யிறைவியே.

(பொ-ரை) தனக்கென ஒரு வடிவு இல்லாதவளாயினும் இவ்வுலகில் உருத்தாங்கி அருள் செய்யும் [இவ்வுலகத்தைப் பலவகைப் பட்டயாக்கைகளாகிய உருவங்களோடு ஈன்ற] தேவி, பொருந்திய சங்கமும் சக்கரமும் வாளும் வில்லும் மாறுபாடு இல்லாத தண்டும் ஆகிய இவையும், கமண்டலமும், ஒப்பில்லாததொரு மழுப்படையும் உடுக்கும் அக்கினியும் கலைகளும் நீங்குதல் இல்லாதவள் (எப்பொழுதும் உடையவள்); உணரப்படும் முத்திரைகள் விளங்குகின்ற அழகிய கைம் மலரை யுடையவள் ஆவள்; எ-று.

[பரிதி—சக்கிரம். சிலை—வில். மலைவுஇல்—மாறுபாடு இல்லாத. பொருவில்லாத—ஒப்பில்லாத. ஒருவிலாதவன்—நீக்கமில்லாதவன். அங்கரம்—அழகிய கை.]

23. சடமெ னப்படு மனம றிந்திடல்
சரித ரும்பொறி புலனுறல்
உடலி னிற்படு முயிரு ணர்ந்திடல்
உரிய ஞானம துயிருறல்
அடலி லாவகை யரிய வீடுறல்
அனைய யாவையு முமையவள்
விடலி லாததொர் கருணை மாரியின்
மிகவ ளம்பெற விளைவவே.

(பொ-ரை) அறியும் இயல்பற்றது எனக் கூறப்படும் மனமானது ஒன்றை அறிந்திடுவதும், சஞ்சரிக்கின்ற ஐம்பொறிகளும் ஐம்புலன்களைப் பொருந்துவதும், உடம்பிற் பொருந்திய உயிர் ஒன்றை உணர்ந்திடுவதும், அவ்வுயிரானது உரிய ஞானத்தை யடைவதும், அவ்வுயிர் மாயையினால் நெருக்கப் படாதபடி (வெல்லப் படாதபடி) அரிய வீடுபேற்றை யடைவதும், அப்படிப்பட்ட பிற அனைத்தும் உமையவளாகிய தேவியின் நீக்கம் இல்லாததொரு கருணை மழையால் மிகவும் வளம் பெறுமாறு விளைவனவாம்; எ-று.

[சரிதரும்——சஞ்சரிக்கும். பொறி—இந்திரியம் புலன்—விடயம். அடல்—(பிறவி) துன்புறுத்தல்.]

24. நவிலு நாலு படிக்க ணிற்பவர்
நன்கு றுந்தவ ஞானமும்
புவிப டைத்தன குணமு முந்துறு
பொறியு நல்லறி வென்பதுஞ்
சவிப டைத்திடு குழலி மாமதி
தவழ ராவொட ணிந்தவள்
கவிக ணெஞ்சுக வந்து வாழ்தரு
கன்னி தன்னருள் காணுமே.

(பொ-ரை) சொல்லப்படும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு படிகளிலும் நின்று ஒழுகுபவர் நன்றாகப் பொருந்துந் தவமும் ஞானமும் (தவஞானமும்) உலகும் உலகுயிர்களும் பெற்றுள்ளன ஆகிய குணங்களும் முற்படக் கூறப்படும் ஐம்பொறி யுணர்வும் (விதியும் அல்லது செல்வமும்) நல்லறிவுகளும், ஒலிபொருந்திய கூந்தலை யுடையவளும் சிறந்த சந்திரனைத் தவழ்கின்ற பாம்புகளுடன் (சிரத்தில்) அணிந்தவளும் கவிவாணருடைய நெஞ்சிற் கலந்து வாழுங் கன்னியும் ஆகிய தேவியின் அருளால் வருவன ஆகும்; அறிவீராக; எ-று.

[நவிலும்—சொல்லும். நாலு படி——சரியை கிரியை யோகம் ஞானம். புவி—உலகு. சவி—ஒளி. அரா—பாம்பு. கன்னி-தேவி.]

25. கற்ப கத்தினி விலகு மாமலர்
கருது வானம டந்தையர்
பொற்ப கத்துற வணிவ ரன்னது
புகழ்ம தங்கிபு னைந்திடாள்
தற்ப ராபரை பத்த ரானவர்
தஞ்செ னப்புரி யன்பதே
விற்ப டுங்குல மலரெ னத்திரு
விழையு மின்னடி சூடலே.

(பொ-ரை) கருதப்படுந் தேவ மாதர்கள் கற்பகத் தருவில் விளங்குஞ் சிறந்த மலரைத் தம் உடம்பில் அழகு பொருந்த அணிந்து கொள்வர்; புகழப்படும் பார்ப்பதி அம்மலரை அணியமாட்டாள்; அந்தப் பராசத்தியானவள் ஒளிபொருந்திய சிறந்த மலர் என்று தனது திருமகள் விரும்புகின்ற இனிய (வீடுபேற்றைத் தருகின்ற) திருவடிகளிற் சூடுவது பக்தர்கள் 'நீயே எங்களுக்குத் தஞ்சம்' என்று கூறிச் செலுத்தும் அன்பாகிய மலரையே யாம்; எ-று.

[மடந்தையர்—பெண்கள். பொற்பு——அழகு. மதங்கி—மதங்கனின் புதல்வி (பார்வதி). புனைந்திடாள்—அணியமாட்டாள். தஞ்சு—தஞ்சம். வில்படும்—ஒளி பொருந்திய.]

26. தேவி தன்மையை யழகெனப்படி
செப்ப லிற்கவின் வேறிலே
ஆவி யன்னவ ளருள தேயொளி
யாத லாலொளி வேறிலே
காவி நேர்விழி யெவ்வ கைப்பொருள்
கால மோடிட மாதலால்
நாவி னிற்றுதி நவில வும்பணி
நாட வும்மெவர் வல்லரே.

(பொ-ரை) தேவியின் தன்மையை அழகு என்று உலகங் கூறுவதனால், அழகு என்பதென்று வேறில்லை. (அழகு அனைத்தும் தேவியின் கூறும்); யாவர்க்கும் உயிரை யொத்தவள் ஆகிய தேவியினுடைய (யாவர்க்கும் உயிராகிய அவளுடைய) அருளே ஒளியாகையால், ஒளி என்பதொன்று வேறில்லை. (ஒளி அனைத்துந் தேவியின் கூறும்); நீலோற் பல மலரை யொத்த விழிகளை யுடையவளாகிய தேவி காலமும் இடமும் எவ்வகைப் பொருளுமா யிருப்பதனால், நாவினால் அவளைத் துதி சொல்லவும் (அவட்குச் செய்யத்தக்க) பணியை விரும்பிச் செய்யவும் யாவர் வல்லவர் ஆவர்? எ-று.

[படி—உலகம். கவின்—அழகு. காவி—நீலோற்பலம். நவிலவும்—சொல்லவும். பணி—தொண்டு.]

(தொடரும்)

இந்துமத ஸாரம்

(161-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக, ஒரே உடலில் இரு பொருள்கள் இருப்பதாகத் தோன்றுகின்றன. ஒன்று, ஜீவான்மாவால் உயிருடையதாக்கப்பட்டும், கருத்தாவாகவும் போக்தாவாகவும் ஆகும் நிலையில் அதனோடு ஒன்றுபடுத்தப்பட்டும் உள்ள புத்தி; மற்றொன்று, சாக்ஷியாக மட்டும் உள்ள ஜீவான்மா. கருத்தாவும் போக்தாவுமான ஜீவனும் சாக்ஷியாக நிற்கும் ஆன்மாவாகிய ஈசுவரனும் ஆகிய இரண்டையும் உபநிடதங்கள் ஓர் அழகிய உவமையின் வாயிலாக விளக்குகின்றன. ஒரே பெயருடைய இரு பறவைகள் ஒரே மரத்தில் ஒன்றோடொன்று நெருங்கியிணைந்து அமர்ந்திருப்பதாகவும், அவற்றில் ஒன்று சுவையுள்ள கனிகளை உண்ணுவதாகவும், மற்றொன்று உதாசீனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவை வருணிக்கப்பட்டுள்ளன. (முண்ட உபநி. 3-1-1 சுவேதா. உபநி 4-6.) ஒரே புத்தியில் உறையும் இருளும் ஒளியும் போலும் அவை கூறப்பட்டுள்ளன (கட உபநி. 1-3-1.)

எனினும், புத்தியோடு ஒன்றுபடுத்தப்பட்டுள்ள ஆன்மாவே ஜீவனாகும். மரத்தின் மீதுள்ள சுறு சுறுப்பான பறவையைப் போல் அவன் தனது செயல்களின் தீய பலன்களையும் இனிய பலன்களையும் துன்ப வடிவமாகவும் இன்ப வடிவமாகவும் நுகர்கிறான். அவன் ஏனைய அந்தக் கரணங்களாகிய மனம் பிராணன்கள் கரும ஞானேந்திரியங்கள் ஆகியவற்றையும் இன்னும் முழுத் தூல உடலையும் உயிருள்ளதாக்குகிறான்.

தூல உடல் வாயிலாகவும் இந்திரியங்கள் வாயிலாகவும் ஒரு மனிதனின் ஆன்மா புற உலகத்தைத் தீண்டுகின்றது. ஆசைகளால் தூண்டப்பட்டு, அது நல்லனவும் தீயனவுமாகிய பலவகைச் செயல்களையும், இயற்றுகிறது; அவ்வழியாகப் புண்ணிய பாவங்களை ஈட்டுகிறது; அவை இனிவரும் பிறவி யாதேனும் ஒன்றில் இன்பதுன்ப வடிவிலே அதனை மீண்டும் சார்வது உறுதி. இவ்வாறு பிறவிச் சுழலிலே அதன் வாழ்வு நீடித்துக் கொண்டே போய், அதனை அடுக்கிவரும் பிறவிகளின் வழியாக இழுத்துச் செல்கிறது. ஒவ்வொரு ஜீவனது அனுதியாக வரும் வரலாற்றிலும் நித்தியமாக இது நடந்து கொண்டே வருகிறது. புத்தி தன்னுள்ளிருக்கும் ஈசுவர பிரதிபிம்பத்தை ஜீவாத்மனாகக் கருதும்வரை இது தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும். ஆத்ம ஞானம் உதயமாகும் போதுதான் புத்தி மறைகின்றது. அது வரை ஜீவன் பிறவிச் சுழலினின்றும் தப்பவொண்ணாது. இக்காரணத்தால், அது தனக்கு இயல்பாக உரிய ஒளிவடிவமாகிய ஈசுவர நிலையோடு ஒப்பிடப் படும்போது, இருளெனக் குறிக்கப்படுகிறது. இதே காரணத்தால்தான், ஜீவனைப் புற உலகத்தோடு சம்பந்தப்படுத்திக் கருமங்கட்கும் அவற்றின் விளைவுகட்கும் உட்படுத்தும் தூல உடலும் இந்திரியங்களும் சாஸ்திரங்களிலே தீமைகளாகவும் (பாப்மான:—பிருஹ, உபநி. 4-3-8) மரண உருவங்களாகவும் (மிருத்யோ ரூபாணி—பிருஹ. உபநி. 4-3-7) உரைக்கப் பட்டுள்ளன.

ஆயினும், உடலும் இந்திரியங்களும் விழிப்பு நிலையில் (ஜாக்கிரத்தில்) மட்டுந்தான் சுறு சுறுப்புள்ளனவாகின்றன. அப்போது

தான் ஜீவன் புற உலகத்தோடு சம்பந்தமுறு கின்றது. ஆகையால் இந்நிலை ஜீவனது வாழ் வின் ஒரு தனிப் பகுதியை எடுத்துக் காட்டு கிறது. அந்நிலையில் மனமும் உடலும் ஆய கரணங்களனைத்தோடும் அது தன்னை ஒன்று படுத்திக்கொள்கிறது. சைதன்யம் (பிரம்மன்) இந்நிலையில் காரணம் சூக்குமம் தூலம் எனும் மூன்று உடல்களாலும் மறைக்கப் படுவதாகவும் நிறம் ஊட்டப்பெறுவதாகவும் தோன்றுகிறது. விழிப்பு நிலைக்குரிய ஜீவ னது வாழ்வுப் பகுதியாகிய இது சாஸ்திரங் களில் 'விச்வம்' என்னும் சிறப்புப் பெய ரைப் பெறுகிறது. இது 'வைச்வானரம்' என்றோ 'விராட்' என்றோ அழைக்கப்படும் ஸமஷ்டிவாழ்வின் ஓர் அணுப் பகுதியே யாகும்.

கனவு நிலையிலே அது தூல உடலும் இந் திரியங்களும் ஆகிய இரண்டின் பிடிப்பினின் றும் தன்னை விடுவித்துக் கொண்டு, அவ் வழியே புற உலகத்தின் தொடர்பை நீக்கிக் கொள்கிறது. விழிப்பு நிலையிலேதான் பெற்ற அனுபவங்களினின்றும் சேகரிக்கப்பட்ட சில மனப்பதிவுகளை (உள்ளச் சார்புகளை— ஸ்ம்ஸகாரங்களைப்) பண்டங்களாகக் கொண்டு, அது தனது ஒளியால் ஒரு கனவு டலையும், தனக்கென ஒரு மன உலகத்தையும் படைக்கிறது; அவ்வுலகிலே பின் கருத்தா வாகவும் போக்தாவாகவும் ஒழுகுகிறது. இக் கனவு நிலையிலே சைதன்யத்தை மறைத்து அதற்கு நிறத்தை ஊட்டுவன, காரணமும் சூக்குமமுமாகிய ஈருடல்கள் மட்டுமே. இந் நிலை 'தைஜஸம்' எனப் பெயர் பெறும் இன் னொரு ஜீவவாழ்க்கைப் பகுதியை எடுத்துக் காட்டுகிறது. இது ஸமஷ்டியிலே இரணிய கருப்பருக்கு ஒத்தது.

சுழுத்தி நிலையிலே (உறக்கத்திலே) புத்தி யென்பது தன்னளவிலே இருப்பும் தொழி லும் அற்றதாகின்றது. அது காரண நிலை அளவாகக் குறுகியதாகிறது ஆயினும் ஜீவ னுக்கும் அதற்கும் உள்ள சம்பந்தம் உள்ள டங்கிய நிலையிலே தொடர்ந்து வருகிறது. காரண சரீரம் மட்டுமே சைதன்யததை மறைக்கும் உறையாகிறது. நாம் முன்னரே கூறியுள்ளபடி, அவ்வியக்தத்தைச் சார்ந்தது; மரம் முழுதையும் விதையில் ஒடுக்கி வைப் பது போல் தனக்குள்ளே ஜீவனுடைய முழு வளர்ச்சியையும் அடக்கிக் கொண்டுள்ளது. அதற்கு இயக்கமுமில்லை, செயலுமில்லை. சஞ் சலமுள்ள இந்திரியங்களும் மனமும் புத்தி யும் இவ்வுடலிலே காரண நிலையிலே அமைதி யாக அமர்கின்றன. இவ்வுடலின் ஒரே தொழிலாவது, பூரண பிரம்ம ஞானத்தை மறைத்தலேயாம்.

ஆயினும் ஆனந்தமய கோசம் என்றும் பெயர்பெறும் காரண சரீரத்தால் மட்டும் மறைக்கப்பட்டுள்ள மெய்ப்பொருள் சுழுத்தி நிலையிலே சின்மயமாயும் ஆனந்த மயமாயும் உள்ள தனது சொந்த சொரூபத்தைப் பெரி தும் ஒத்திருப்பதாய்த் தோன்றுகிறது. இந் நிலையிலே ஆன்மாதான் உண்மையாகவே எப்போதும் இருப்பதுபோலவே அசைவற்று இருக்கின்றது. அது உடல் மனங்களின் அசைவால் ஆட்டிவைக்கப் படுவதில்லை. அது அந்நிலைக்கு வெறும் சாக்ஷியாக இருந்து, தனது சொந்த இன்பத்தால் அதில் அமை தியை நிரப்புகின்றது. "ஒரு வல்லூறு ஆகா யத்திலே பறந்தமையாற் களைப்படையும் போது தனது சிறகுகளை விரித்து, தன் கூட்டை நோக்கிச் செல்லத் தலைப்படுவது போல அகண்டப் பொருளும் இந்நிலையை நோக்கி ஓடி, ஆங்கே உறக்கத்தில் அழுந்தி ஆசையும் கனவும் அற்றதாகின்றது" (பிருஹ. உபநி. 4-3-19) விழிப்பு நிலையிலும் கனவு நிலையிலும் நிகழ்ந்த கருமங்களாலும் அனுபவங்களாலும் களைப்படைந்த ஆன்மா இங்ஙனம் சுழுத்தியில் தனக்குரிய அமைதி நிலையினை எய்துகின்றது. இக்காரணம் பற் றியே இந்நிலையில் ஜீவன் மெய்ப்பொரு ளோடு ஒன்றித்து விடுவதாகக் கூறப்படுகின் றது. (ஒப்பிடுக: சாந்தோ உபநி. 6-8-1) 'உறங்கு' எனும் வினையடியாகப் பிறந்த படர்க்கை ஒருமையாகிற 'உறங்குகிறான்' என்பதற்குச் சரியான வடமொழிப் பதம் ஸ்வபதி' என்பது, ஒருவன் இந்நிலையில் தனது மெய்யான ஆன்ம நிலையினை எய்துகிறான் என்பதையே (ஸ்வம் அபிதோபவதி-சாந்தோ உபநி. 6-8-1) குறிப்பதாகக் கூறப்படுகிறது.

என்றாலும் சுழுத்தி நிலையிலே ஆன்மா ஒன் றையும் காண்பதாகவோ அறிவதாகவோ தோன்றுவதில்லை. இத்தோற்றத்தின் கார ணம், அந்நிலையிலே அதனைத் தவிர வேறொரு பொருள் காண்பதற்கோ அறிவதற்கோ இல்லாமையேதான். [ஒப்பிடுக: பிருஹ. உபநி. 4-3-23] அதன் உணர்வு (சைதன்யம்) அழிய வொண்ணாததாதலின், அக்கால முழு வதும் மாறுபாடின்றி யுள்ளது. விழித்ததும் தனது உறக்கத்திற்கு யாதொரு தொந்தர வும் இல்லாதிருந்ததை நினைவிற் கொள்ளு கின்றது. சுழுத்தி நிலையிலே ஆன்மாவின் சாக்ஷியாயிருக்கும் தொழில் தொடர்ந்து நிகழ்ந்து வருவதற்கும் இது ஒரு சான்றாகின் றது.

ஆயினும், காரண சரீரத்தால் மட்டும் மறைபட்டும் நிறம்பெற்றும் உள்ள இந்நிலைய சைதன்யம் ஜீவனின் வாழ்விலும் அனுபவத் திலும் காணப்படும் ஒரு தனிப்பட்ட வகை யினைக் குறிக்கின்றது. இவ்வுண்மையை இந்துமத சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன, அந்நிலையிலுள்ள ஜீவனுக்குப் 'பிராக்ஞன்' எனும் சிறப்புப் பெயரையும் இடுகின்றன. பரப்பிரம்மம் (தனிப்பட்ட மனிதனது) வியஷ்டி காரண உடலால் மறைபட்டும் நிறம் பெற்றும் உள்ள போது, பிராக்ஞனு கத் தோன்றுகிறது; சமஷ்டி காரண உட லால் மறைபட்டும் நிறம் பெறும்போதும் ஈசு வரனுகத் தோன்றுகிறது.

ஆக, ஜீவன் மாறிமாறி நனவு கனவு உறக் கம் (விழிப்பு கனவு சுழுத்தி) எனும் மூன்று வெவ்வேறு நிலைகள் வழியாகச் செல்லுகி றது. ஒவ்வொரு நிலையும் அதன் வாழ்வு வகைகளில் ஒன்றைக் காட்டுகிறது. விழிப்பு நிலையில் அதன் செயலும் அனுபவமும் தூல உலகத்தோடும், கனவு நிலையில் அது தானே படைத்துக் கொள்ளும் ஓர் உலகோடும் சம் பந்தப்படுகின்றன; சுழுத்தி நிலையிலோ அது பூரண அமைதி நிலைக்குச் சாக்ஷியாக நின்று, ஆனந்தத்தை அனுபவிக்கின்றது. விஞ் ஞான மயமான ஜீவன் (புத்தியோடு ஒன் றித்து நிற்கும் ஜீவன்) முதலிரண்டு நிலைகளா கிய விச்வன் தைஜசன் எனும் இரண்டிலும் மட்டும் தொழிலியற்றுகின்றது என்பதும் இங்கே கருதத்தக்கது. மூன்ருவது நிலையில் அதன் ஜீவத்தன்மை அடங்கி மறைந்திருக் கின்றது; (காரண நிலையிலுள்ள) புத்தியி னின்றும் விடுபடும் ஆன்மா ஈசனேடு ஒன் றித்துப் பிராக்ஞனுகத் தோற்றமளித்து, சாக்ஷியாக மட்டும் அமைகின்றது.

இக்காரணம் பற்றியே சாஸ்திரங்கள் பின்வருமாறு கூறுகின்றன: புத்தியோடு ஒன்றித்து நிற்கும் சுயம் ஜோதியான ஜீவாத்மா தூல உடலையும் இந்திரியங்களையும் தீண்டியும் தீண்டாமலும் விழிப்பு நிலைக்கும் கனவு நிலைக்கும் இடையே மீண்டும் மீண்டும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. ஓர் ஆற் றின் இரு கரைகட்கும் இடையே, அதன் நீரோட்டத்தால் தடைப்படாது மாறி மாறிச் செல்லும் ஒரு மிகப்பெரும் மீனைப்போல ஜீவாத்மா இவ்விரண்டு நிலைகட்கும் இடையே தங்குதடையின்றிச் சஞ்சரிக்கின் றது. (ஒப்பிடுக: பிருஹ. உபநி. 4-3-18.)

இம்மாதிரியே ஜீவன் ஒரு குறிப்பிட்ட தூல உடலிற்குட் புகுந்தும் அதைவிட்டு வெளியேகியும் இவ்வுலகிற்கும் அடுத்த உல கிற்கும் இடையே மாறிமாறிச் சென்று வருகின்றது. (பிருஹ. உபநி. 4-3-9). எந்தத் தூல உடலிலும் ஆன்மாதான் முன்பு இயற் றிய கருமங்களின் பயனில் ஒரு பகுதிக்கு ஏற்றவாறு சிறிது காலம் வாழ்கிறது. அதன் தற்கால வாழ்வைத் தீர்மானிக்கும் இக் கரும பலனின் (பழவினையின்) பகுதி 'பிராரப்தம்' எனப்படும். அது ஊட்டிக் கழிந்தபின், ஆன்மா காரண சூக்கும உடல்களோடு கூடித் தூல உடலை விட்டுவிடுகிறது. இந் நிகழ்ச்சியே இறப்பு எனப்படும். உண்மை யிலே தூல உடலே இறக்கின்றது. ஆன்மா அன்று. 'ஆன்மாவை இழந்து இவ்வுடல் இறக்கின்றது. ஆன்மா இறப்பதன்று.'' (சாந்தோ. உபநி. 6-1-13) ஆன்மா ஒரு தூல உடலைப் பெறும்போது பிறந்ததாகச் சொல் வதும், அதனை விடும்போது இறந்ததாகச் சொல்வதும் உபசார வழக்கே யன்றி வேறல்ல (ஒப்பிடுக: 4-3-8). உண்மை யாதெ னில், ஆன்மா பிறப்பிற்கோ வளர்ச்சிக்கோ அழிவிற்கோ ஆளாவதில்லை; இம்மாறுபாடு கள் யாவும் தூல உடலிற்கே உண்டாகின் றன.

உள்ளதை உரைப்போமாயின், சூக்கும உடலே ஈசனது பிம்பத்தைத் தனது ஆன்மா வாகக் கொண்டு, தூல உடலை விட்டு வெளி யேறுகின்றது. ஈசன் சைதன்யமேயாதலின் எங்கும் வியாபகமுள்ளவன்; ஆதலின் அவ னுக்குச் செல்லும் இடம் ஏது? புத்தியிலே தெரியும் ஈசனது பொய்ப்பிம்பமே புத்தி யோடு அசைவதாகத் தோன்றுகிறது. புத்தி ஆன்மாவின் பிரகாசத்தால் விளக்கம் பெற்று ஏனைய அந்தக் கரணங்களோடு ஒரு தூல உடலுட் புகும்போது ஆன்மா பிறந்ததாகச் சொல்லப்படுவதும், அது அவ்வுடலை விட்டு வெளியேறும்போது இறப்பதாகச் சொல்லப் படுவதும், இப்பொருளிலேதான் என்க.

இவ்வாறு ஜீவன் இவ்வுலகிற்கும் அடுத்த உலகிற்கும் இடையே உலவிக் கொண்டிருக் கின்றது. பிறப்பு இறப்புகட்கு இடையே மாறிமாறி உழலும் அதன் சஞ்சாரம் அனுதி காலந் தொட்டே நிகழ்கின்றது என்பர். காரண சூக்கும உடல்கள் கல்ப காலங்களி லும் (சிருஷ்டி பிரளய காலங்களிலும்) அழி யாது நிற்கும். இயற்கையிலுள்ள எதுவும் அவற்றை அழிக்கமாட்டா. நாம் முற்கூறிய படியே பிரம்ம ஞான உதயத்தால் மட்டும் அழிவடையும். ஆன்மா புத்தியைப் போலும், புத்தி ஆன்மாவைப் போலும் தோற்றமளிக் கும்வரை, இவ்விரு உடல்களும் நிலையாயிருக்

கும். அவித்தையே (மூல அஞ்ஞானமே) இப் பொய்க் காட்சியை உண்டாக்குகிறது. ஒன்றின் குணங்கள் மற்றென்றினுக்கு உரியன போலத் தோன்றுகின்றன. இப்பொய்த் தோற்றம் 'அத்தியாசம்' எனத் தனிப் பெயரைப் பெறுகின்றது. இந்த அத்தியாசத்தால் உடலும் மனமும் கூடிய முழுச் சேர்க்கையும் ஆன்மாவைப் போல் ஒரு சித்துப் பொருளாகப் பாவனை செய்கிறது. இக்காரணத்தால் ஒரு மனிதன் உண்மையாகவே தனது தூல உடலோ மனமோ விகாரமடையும் போது, "நான் கிழவனானேன், நோயுற்றவனானேன், கவலையுறுகிறேன், ஆனந்தமாயிருக்கிறேன்" என்று சொல்கிறான்.

இந்த அத்தியாசம் நீங்குவது, ஒரு மனிதன் தனது ஆன்மாவை உள்ளவாறு அறியும் போது தான். ஜீவனின் அனாதியான சஞ்சாரம் ஒரு பெருமையுற்ற முடிவடைவதும் அப்போது தான். அச்சமயம் மாயையும் அதன் பொய்யான விளைவுகளாகிய நாம ரூபங்களும் முற்றும் மறைந்து விடும். எல்லா உபாதிகளும் தாமே நழுவி விடுகின்றன. பரம்பொருளை மறைத்தற்கும் அதற்கொரு நிறத்தை ஊட்டுதற்கும் எதுவும் இல்லை; சைதன்யத்தைப் பிரதிபலித்தற்கும், அதன் பிம்பத்தை ஏந்துவதற்கும் எதுவும் அப்போது இல்லை. எண்ணிறந்த கற்ப காலங்களாக, மாயையின் சக்தியால் தன்னை வரம்புக்குட்பட்ட அறிவுத் திறனும் வினைத் திறனும் உடைய பொருளாகக் கருதி வந்தது யாதோ, அது மிக நீண்ட காலத்திற்குப் பின் தன்னை அகண்ட சச்சிதானந்தக் கடலான பரப்பிரம்மமேயன்றி வேறல்ல என்று உணருகிறது. ஓர் ஆறு பற்பல இடங்கள் வழியாகச் சென்றபின் இறுதியாகக் கடலைச் சார்ந்து, அதனோடு மருவித் தனது தனித்த இயல்பை இழப்பது போல, ஜீவனும் பற்பல உலகங்களிலே பலப்பல உடல்களோடு எண்ணிறந்த முறை பிறப்பதும் இறப்பதுமாக அனாதி காலமாகப் பயணஞ் செய்த பின்னர் இறுதியாகத் தனக்குப் பரமமூலமான பொருளினை அடைந்து, அதனோடு இலயமாகி விடுகிறது. ஜீவனுடைய வாழ்வாகிய கனவு, இவ்வாறு அது தனது உண்மையான இயல்பை அறிந்ததும், முடிவடைகின்றது.

முழு பிரம்ம ஞானத்தால் இப்பேற்றை அடைய இயலும் படியான ஒரு நிலையிலே மனிதன் அமைக்கப்பட்டிருக்கிறான். சில மனிதர் இப் பிறவியிலேயே இம் முயற்சியில் வெற்றி பெற்று, 'ஜீவன் முக்த' ராக (உயிருள்ள போதே விடுபட்டவராக) ஆகின்றனர். சிலர் இப்பிறவியின் முடிவிலே அதனையடைகின்றனர் (இது விதேக முக்தி) வேறு சிலர் இப்பிறவியிலே மிகவுயர்ந்த நிலையினை அடைந்து வரவரப் படிப்படியாக விடுபடுதல் என்னும் 'கிரம முக்தி' யெனும் நிலை வழியாக அதே பேற்றை இறந்தபின் எய்துகின்றனர். இறந்தபின் அவர்கள் பற்பல உலகங்கள் வழியாகச் சென்று, இறுதியிலே பிரம்ம லோகம் சார்ந்து, ஆங்கே கல்ப முடியுமளவும் வாழ்ந்து, அவ்வுலகிற்கு அதிதேவதையான இரணிய கருப்பரோடு பின்னர் முக்தியடைகின்றனர்.

ஆசையால் உந்தப்பட்டு நல்வினைகளையோ தீய வினைகளையோ இயற்றும் ஏனையோர் யாவரும் மேலுலகங்கட்கோ கீழுலகங்கட்கோ சிறிது காலம் சென்று, பின் இப் பூவுலகிற்கே மீளுகின்றனர். தமது வினைப் பயனை நுகர்தற் பொருட்டு அவர்கள் செடிகளாகவோ புழுக்களாகவோ தாழ்ந்த மிருகங்களாகவோ வாழும் அவசியத்திற்கு உட்படலாம். அத்தகைய இழிந்த பிறவிகள் வாயிலாகத் தமது தீவினைகளின் பயனான துயரத்தை அனுபவித்த பின், அவர்கள் மீண்டும் மனிதப் பிறவியைப் பெறுகின்றனர். மனிதப் பிறவியில் மட்டுமே ஜீவனுக்குப் பிரம்ம ஞானம் பெற்று முக்தியடைவதற்குரிய சந்தர்ப்பம் வாய்க்கின்றது. இக் காரணம் பற்றியே மனிதப் பிறவியைச் சாஸ்திரங்கள் மிகமிகப் புகழ்கின்றன; ஜீவன் தன்னிடத்து அடங்கிக் கிடக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துதற்கு ஏற்ற பெறற்கரிய பேறாக அப்பிறவியை மதிக்கின்றன.

(தொடரும்)

மாதொருபாகன்

டர்பன், திரு. ச. மு. பிள்ளை

சிவபெருமானது திருவுருவமானது திரு முடியிலிருந்து திருவடிவரைக்கும், வலது பாகம் ஆணும், இடதுபாகம் பெண்ணுமாக விருக்கின்றது. மாதொருபாகனக அவரை வழிபடுவதே சைவசமயிகளின் முதற்கொள் கையாகும். அவர்கள் கல்வி, ஆற்றல், செல் வம் முதலியவற்றிற்கு உவந்ததெய்வங்களாக முறையே கலைமகள், பராசக்தி, திருமகள் என விதிப்படுத்தி வணங்குகின்றார்கள்.

சிவனடியார்கள் சிவனைத் துதிக்கும்பொ ழுது, பெரும்பாலும் அவரது தொன்மைக் கோலமாகிய 'மங்கை பங்கன்' திருவுருவத் தில் ஈடுபட்டு, அடிக்கடி மிக்க அன்புருக அதனை விவரிக்கும் முகத்தால் பக்தியைப் புலப்படுத்துவர். மாணிக்கவாசக சுவாமி களும், இத்திருக் கோலத்தையே கண்டானந் தித்தாரென்பது அவரது அருள்வாக்காற் பெறப்படும்.

"தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்
கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய்
கோத்தும்பீ.
(திருவாசகம்)

இன்னும் திருஞான சம்பந்த மூர்த்திகள் பாலரு வாயரா யிருக்கும்பொழுது கண்ட காட்சியும் அம்மையப்பரே.

தாய் இல்லையாயின் உலகமுமில்லையாகும். எனவே உலகத்திற்கு இன்றியமையாத சிறப் பினையுடைய தாயானவள் உயிர்களைப் பெற்று வளர்ப்பதில் பலவித இன்னல்களை அனுபவிக்க வேண்டியவளாக விருந்தும் அவ ளுக்கு அக்கஷ்டம் சிறிதும் தோன்றாமல் ஆண்மக்கட்கு வாய்க்கமாட்டாததும், என் றும், மாறுபடாததும், எஞ்ஞான்றும் ஒரே தன்மைத்தாய்த் தலைசிறந்து விளங்கும் ஒருவகைத் தாயன்பே ஊற்றெடுத்துத் ததும்பி நிற்கும். தாய் காட்டக் கண்ட தந்தை யேயாகும். பிள்ளைகளும் தாயிடமே முதல் அன்புடையராயிருக்கின்றனர். சிவனடியார் கள் சிவனை வணங்கும்பொழுது, "அம் மையே அப்பா ஒப்பிலா மணியே" (திருவாச கம்) எனவும், "அம்மையப்பரே"! (உலகுக் கம்மையப்பரென்றறிக) (திருக்களிற்றுப்படி யார்) எனவும் போற்றுகின்றனர். இன்னுஞ் சில நாயன்மாரும், புலவர்களும், தாம் ஆண் மக்களே யாயினும், கடவுள் திருமுன் பெண் மக்களாகப் படைத்து வைத்துக் கொண்டு, தம்மைக் காதலிகளாக்கிக் கூறியிருப்பது மக ளிரன்பு சிறப்புடைத் தென்பதை விளக்கு கிறது.

வெளிப்பார்வைக்குக் கணவனும் மனை வியும் இருவராய்த் தோன்றுவர். உட்பார்வைக்கோ இருவரு மொருவராவர். ஈருடல் ஒருயிருமெனக் காணப்படுவதையும் கூறல் பொருந்தும். மங்கை பங்கன் வடிவத் திலோ, உளத்தில் நிகழும் ஒற்றுமை உடலி லும் காணப்படுகின்றது. அகத்துத் தோன் றும் அருளொளியைப் புறத்தே புலப்படுத்து வது இவ்வழகிய அர்த்த நாரீஸ்வர வடிவ மாகும்.

இனி, இவ்வடிவத்தின் புராண வரலாற்றி னைச் சிறிது கவனிப்போம். பண்டொரு ஞான்று பரமனும் பார்வதியும் கயிலையங் கிரியில் வீற்றிருக்கையில், அங்கு வந்த பிருங்கி முனிவர் சிவனை மட்டும் தொழுது வலம் வந்து சென்றனர். இதனைக் கண் ணுற்ற பார்வதி, முனிவர் மீது வியப்புக் கொண்டு சிவனுக்கருகில் வீற்றிருந்தாள். மறு நாளும் பிருங்கி முனிவர், வழக்கம் போல் வணங்கி வந்த பொழுது, பார்வதி சிவ னுக்கருகில் நெருங்கி வீற்றிருத்தலைக் கண்டு, வண்டின் வடிவெடுத்து, அவர்கள் இருக்கை யைப் பிரித்து, சிவனை மாத்திரம் வணங்கிச் சென்றார். அது கண்ட பார்வதியார் அதன் காரணத்தை வினவினர். அவர், "இம்மை நலனை விழைந்தார் உன்னையும், மறுமைப் பயனை விரும்பியவர் என்னையும் வணங்குகின் றனர். பிருங்கி முனிவரும் மறுமைப்பயனை நாடி என்னை வணங்கிச் செல்லுகின்றார்" என்று விடையிறுத்தார். அப்பொழுது உமை, "ஐய, உமக்குளதில் எனக்கும் பங் கில்லையோ? என விரங்க, சிவபெருமான் தனது உடலில் இடது பாதியை அவளுக் கீந்து, ஆணும் பெண்ணுங் கலந்த அர்த்த நாரீஸ்வர வடிவமானார்.

ஒன்றும் ஒன்றும் கூடின் இரண்டாகும். ஆனல் ஒன்றும் ஒன்றும் ஒன்றி ஒன்றாகும் நிலைமையே அர்த்த நாரீஸ்வர வடிவமாகும். அருவுருவ வடிவமே இது என்பாருமுளர். இவ்வடிவத்தைக் குறிப்பிடுவதற்கு இவ்வ ளவு நீடித்த சொற்களன்றித் தமிழ்மொழி யில் எளிதான சொற்களில்லையோ வெனச் சிலர் ஐயுறலாம். அவ்வையத்தைக் குமாரகுரு பர சுவாமிகள் அகற்றிவிட்டனர். இம்மா

பெரும் புலவர் மங்கை பங்கன் திரு முன் னின்று, அவர்களிருவரையும் ஒன்று சேர்த்து வணங்குதற்குத் தமிழ் மொழி யுதவாதிருப்பின், என்பாடு என்னவாகுமோ எனக் கழிவிரக்கங் கொண்டு பாடுகின்ருர். இச்சொல் தரித்திரனுக்குப் பொற்குவியல் கிடைத்ததை. யொப்ப, சுவாமிகட்குப் பேரானந்தத்தை உண்டாக்கியது. அச் சொல் எதுவென்பதை அவர் வாய் மொழி யாற் கேட்டு இன்புறுங்கள்.

"ஒருவனுக்கு" மொருத்திக்கு முருவொன் ருலவ்
வுருவையிஃ தொருத்த னென்கோ ஒருத்தி யைன்கோ
இருவர்க்கு முரித்தாக வொருவரென்ருேர்
இயற் சொலிலதெனில் யான் மற்றென் சொல்கேனே.

இன்னொரு முறை, குமரகுருபர சுவாமி கள் உமாமகேசுவர வடிவத்திலீடுபட்டு 'எம் தாயே' என்றழைப்பதா, அன்றி 'எம் தந் தையே' என்றரற்றுவதா, எனக் கலக்க முற்று 'எந்தாய்' என மிகச் சாதுரியமாய் அழைத்து இக்கஷ்டத்தினின்றும் தப்பித்துக் கொள்ளுகின்ருர். இச்சொல் எம்-தாய் என வும், எம்-தந்தை எனவும் பொருள்படும் எனவே, இருவரையும் ஒருங்கு விளித்தவாரு யிற்று. அடியாரின் உண்மைப் பற்றும், தமிழ்மொழியின் சிறப்பும் இச் செய்திக ளால் எளிதிலுணரற்பாலன.

ஆண் வலத்திலும் பெண் இடத்திலுமிருப் பது, வலம் ஆண்களுக்குரிய வலிமையை யுடையதாலும், இடம் பெண்களுக்குரிய மென்மைத் தன்மையுடையதாலு மென்க. வலக்கையானது அதிகம் அசைந்து திரிந்து சுறு சுறுப்பாக வேலைகளைச் செய்ய, இடக் கையானது அதற்கிசைந்து அதிகம் அசையா மல் தன்னிடத்திலிருந்து கொண்டே மென் மையான வேலைகளைச் செய்து உதவிபுரியும். ஆகவே, சொல்லினும் செயலினும் அடக்க மும் மென்மையும் விளங்கத் தமது கடமை களைச் செய்து முடிப்பதே பெண்மைக்கழகு.

சிவனும் சக்தி சமேதராக நின்று தொழிலி யற்றுவர். இவ்வுலகமும் அதிலுள்ள சர்வ சிருஷ்டிகளும் ஒரு காலத்தில் அழியும். அவையழிந்து ஆதி சக்தியில் ஒடுங்கும். அந் தச் சக்தியும் சுத்த சிவத்திலொடுங்கும். அப் பொழுது சிவம் யாதொரு செயலும் அற்ற சுத்த சிவமாய் விளங்கும். இவ்வாறு அழித் தற்ருெழிலினல் உயிர்கள் பிறப்பு நீங்கி ஒடுங்கி இளைப்பாறியிருக்கும் பொழுது, மீள வும் அவைகட்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டுப் படைத்தல் முதலிய தொழில் களைச் செய்யத் திருவுளங் கொண்ட அள வில், சிவன் கருணை முதலிய திருவருட் குணங்களோடு, அருளே திருமேனியாகக் கொண்டு சக்தி சமேதராக விளங்குவர்.

இதனல் ஆண் பெண் ஒருவர்க்கொருவர் இன்றியமையாதவரென்றும், யாவும் பெண் களிலேயே தங்கியிருக்கின்றன என்றும், அறியலாம். துறவியை அவர் தந்தையும் வணங்க வேண்டுமென்பது முறையெனி னும், தாயைத் துறவியும் வணங்க வேண்டு மென்பதே விதியும் சான்ருேர் கூற்றுமாம். முற்றுந் துறந்த பட்டினத்தடிகளும் தனது தாயின் ஈமக் கடன்களை முடிக்கத் திருவுளங் கொண்டமையும், நைந்துருகினமையும் அவ ரது பாடல்களாற் பெறப்படும்.

தாயைப் பங்காகவுடைய கடவுட் பெரு மையையின்னும் இச்சிறு கட்டுரையில் எடுத் தியம்பல் அரிதாகுமாதலால், யாரை வழி படினும் மாதொரு பாகனுரே நமக்குக் காட்சி அளிக்கின்ருரென்பது, "யாதொரு தெய்வங் கண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனுர் தாம் ஒருவர்" எனும் அருள்வாக்கால் அறிந்தின்புறுக!

வேதாந்த சாரம்

நாவலர்

(164-ம் பக்கத் தொடர்ச்சி)

மனவாழ்வும் ஆன்மிய வாழ்வும்

நமது வாழ்வு மன வாழ்வு என்று கூறி னேம். மனங் கடந்த வாழ்வு ஒன்று உண்டு என்று கூறினல், அது பலர்க்கு வியப்பாகத் தோன்றும். சுழுத்தி, மயக்கங்கள் உண்டா கும் பொழுது, நாம் ஒருவாறு மனங் கடந்த வாழ்விலேயே தங்குகின்ருேம். அந் நிலை களில் மனத்தின் தொழில்கள் அடங்கி விடு கின்றன. ஆயினும், அவை மனம் அடங்கிக் கிடக்கும் நிலைகளேயன்றி மனங் கடந்த நிலை கள் அல்ல. அவை நீங்கிய பின் மனம் முன் னிருந்தவாறே உலகியற் பற்றுக்களை மேற்

கொள்கின்றது. அன்றியும், அந்நிலைகளில் அறிவு விளக்கம் பெறுவதில்லை. ஆகவே, அவை மனமாயையின் கீழுள்ள நிலைகளாகவே இருக்கின்றன.

மனங்கடந்த நிலையாவது மனம் ஒடுங்கிய நிலை. மனம் எங்கே ஒடுங்குமெனில், ஆன்மாவில் ஒடுங்கும். அவ்வமயம் ஆன்மா தன்னைத்தான் அறிந்து தானேதானாய் விளங்கும். அதுவே; நம்மை நாம் உணர்ந்து அறிவாய் நிற்கும் நிலை. அது சமாதி எனவுங் கூறப்படும். சமாதிநிலை கலைந்தாலும், மனம் உலகியற் பற்றின்றியே நிற்கும். சமாதி நிலையில் நின்று தலைவனைக் கலந்து நிற்கும்நிலை மகாசமாதி நிலை, நிர்விகற்ப சமாதிநிலை.

அந்நிலையை நாம் அடைவதற்கு நமக்குத் துணை செய்யும் நண்பன் நமது மனமே, உலக வாழ்வுக்கும் ஆன்மீய வாழ்வுக்கும் நமக்குத் துணையாயிருப்பது மனமே. மனத்தை அடக்கியாளும் சான்றோர் உலகியல் வாழ்வில் புனிதமான புகழைப் பெற்றுப் பொருவருஞ் சிறப்பை மேவுகின்றனர். ஆன்மீய வாழ்வில் மனத்தை ஒடுக்கி அறிவு நிலையில் நிற்போர் பிறவாப் பேற்றை எய்தி வீடு பேற்றின்பத்தைத் துய்க்கின்றனர்.

மனம் சுத்தம் எனவும் அசுத்தம் எனவும் இருவகையாகச் சொல்லப்படுகின்றது. காம நினைவுடையது அசுத்த மனமும் அஃதற்றது சுத்த மனமுமாம். "மனோஹி துவிதம் ப்ரோக்தம், சுத்தம் (அ) சுத்தமேவச, அசுத்தம் காமஸங்கல்பம், சுத்தம் காம விவர்ஜிதம்" என்பது அமிருத பிந்து உபநிடதம்.

மனம் தன் மாட்டுள்ள காமம் மோகம் முதலிய அரிட்டவருக்கங்கள் நீங்கினலன்றிக் கட்டுப்படாது. மண் துரு முதலியவற்றல் மாசுண்டு கிடக்கும் இரும்பை மாசு நீக்கினல் மட்டுமே நமக்குத் தோன்றியவாறு அதனைப் பயன்படுத்த முடியும். காமாதி ஆறு குணங்களையும் காமம் வெகுளி மயக்கம் என்னு மூன்றில் அடக்கலாகும். இம் மூன்றும் எல்லாவித தீக்குணங்களுக்குங் காரணமாகிப் பாவத்தை விளைக்கின்றன.

தன்னலத்தில் நின்றுங் காமம் அரும்புகின்றது. தன்னலத்துக்கு இடையுறு நேருமிடத்து வெகுளி அரும்புகின்றது. பொருளுண்மையைப் பற்றிய நெறிப்பட்ட ஆராய்ச்சியின்மையால், மயக்கம் உண்டாகின்றது. இம்மூன்றும் மனத்தைத் தடிப்பேறச் செய்து உயிர்களைப் பிறவிப் பெருங் கடலில் வீழ்த்துகின்றன இவை நீங்கின் மனம் தூய்மை அடையும்; மனம் நிற்கும் வழி நின்று அடங்கும். மனம் அடங்கவே வீடுபேறு வாய்க்கும்.

'காமம் வெகுளி மயக்க மிவை மூன்றின்
நாமங் கெடக்கெடு நோய்'
என்பது தமிழ் மறை.

மனமே பிறவிக்கும் வீடு பேற்றுக்குங் காரணமாம். ஐம்புலன்களாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களால் கவரப்படாத மனம் வீடு பேற்றை அளிக்கவல்லது. ஐம் புலன்களின் வழி ஓடும் மனம் எண்ணற்ற பிறவிகளைத் தோற்றுவிக்குந் தன்மையுடையது.

'மனமேவ மனுஷ்யாணும் காரணம் பந்த மோக்ஷயோ: பந்தாய விஷயா ஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்மிருதம்' என்பது அமிர்த பிந்து உபநிடதம். அழிவனவாகிய ஐம்புல இன்பங்களை விரும்புவதனல் அழியாததாகிய பேரின்பம் இழக்கப்படுகின்றது.

இறைக்கு நாம் அளிக்கத் தக்கது மனம் ஒன்றே, பிற வல்ல, இறைவனிடத்தில் மாருத அன்பு செலுத்த வேண்டும் என்பது மனத்தை அவனிடத்து ஒப்படைக்க வேண்டும் என்பதற்கு ஒரு பரியாயமே யாகும். கன்மத்தாலும் பக்தியாலும் யோகத்தாலும் ஞானத்தாலும் ஆன்ருேர் மனத்தைப் பரம் பொருளிடத்து ஒப்படைக்க முயலுகின்றனர்.

மனம் ஒன்றே பரம்பொருட்கும் நமக்கும் இடையே தடைகல்லாக இருக்கின்றது. அக் கல்லினை நாம் ஒருதலை யாக நீக்கல் வேண்டும். அதனை இறையினிடத்து வழிப்படுத்தல் வேண்டும். வீழ்நாள் படாது அந்நன்ருற்றின், அது நமது வாழ் நாளை வழியடைக்குங் கல்லாகும்.

'உள்ளு மறியா மனதுபலி கொடுத்தேன் கன்ம
துட்ட தேவதைகளில்லை
தூரிய நிறை சாந்ததேவதையா முனக்கே
தொழும்பன்,'
என்ருர் தாயுமானவடிகள்.

உலக முழுவதும் நமக்குப் புலனவது மனக் கண்ணாடியிலேதான். இன்ப துன்பங்களை நிறைத்து வைத்திருப்பது மனப் பேழையில்தான். காமாதி குணங்களைச் செறித்து வைத்திருப்பது மனச் செப்பில்தான் மனம் மறையுந் தோறும் உலகம் நம்மைவிட்டு மறையும். மனமாகிய விழி திறந்திருக்கும் போழ்து உலக முழுதுந் தோற்றமாகின்றது. மனக்கண் அடைக்கும் பொழுது உலகம்

மறைந்து விடுகின்றது உலகு முழுதும் மன மயக்கந்தான். மனம் ஒருசிறிது மாசடையு மாயின் அது பல் கோடி பிறவிகளை நமக்கு ஈட்டிக் கொடுக்கும்; ஒருசிறிது தூய்மை அடையுமாயின், அத்தூய்மையில், கோடி பிறவிகளை நீக்கிவிடும். நாம் கருத்துற்றுப் பேணத் தக்கதும் அடக்கியாளத் தக்கதும் ஒன்றேயொன்று. அது தான் மனம். அது நேர் நெறியில் நின்று சிறிது தவறுமாயினும் நாம் கருதற்கரிய இன்னற் காடுகளை அடையக் கூடும்.

மனத்தின் பின் சென்று அதற்கு அடிமையாய் வாழ்வது மன வாழ்வு—உலகியல் வாழ்வு. மனத்தைப் பின்னிட்டு அதை அடக்கியாளும் வாழ்வு ஆன்மீய வாழ்வு. எத்துணைக்கு (எவ்வளவுக்கு) நாம் மனத்தை விட்டு நீங்குகின்றேமோ அத்துணைக்கு நாம் நமது வாழ்வு ஆன்மீய வாழ்வாகத்--தெய்விக வாழ்வாக வடிவுறுகின்றது.

நமது வாழ்வு ஆன்மீய வாழ்வாக மாறுதல் அடைய வேண்டும். ஆன்மா இன்னதென்று அறியாமல் நாம் ஆன்மீய வாழ்வை மேற்கொள்ள இயலாது. தெய்வத்தின் உண்மையைப் பரோட்சமாகவேனும் அறியாவிடில், தெய்வ நெறியை நாம் மேற்கொள்ள முடியாது. ஆன்மாவை அபரோட்சமாக அறியாதவர்க்கும் ஆன்மீய வாழ்வை மேற்கொள்ளலாகும். அவ்வாழ்வு அபரோட்ச ஞானத்தை விரைவில் அளிக்கும்.

ஆன்மா ஒன்றுண்டென்று உணர்பவர் பதினாயிரத்தொருவர் தாம். அவ்வறிவு நெடும் பிறவிப் பௌவத்து (கடலின்) அலைகளின் மோதுண்டு பக்குவ மெய்திய புண்ணியர்களுக்கே தலைப்படுவது. பொது மக்கள் உடம்பு, பிராணன், பொறி, இன்பங்களையே ஆன்மாவாகக் கருதுகின்றனர். 'நான்' என்னும் சொற்குப் பொருள் ஆன்மாவேயாம். ஆன்மா அறிவு வடிவானது, வினையற்றது, குணங்களற்றது எனறு நாம் உணரக் கூடுமாயின், நமக்கு எவ்விகலும் விளையாது.

வாழ்வும் ஞானமும்

'நான் சின்மாத்திர வடிவம், தேகேந்திரியாதிகளுக்கு அப்பாற்பட்டவன். எல்லா ஆன்மாக்களும் நானாகவே இருக்கிறேன்' என்ற நினைவு வேண்டும். தன்னிடத்தில் எல்லா ஆன்மாக்களையும் எல்லா வான்மாக்களிடத்திலும் தன்னையுங் காண்கின்றவன் பிரம்மத்தை அடைகின்றான் என்று சுருதி கூறுகின்றது.

''ஸர்வ பூதஸ்தம் ஆத்மானம் ஸர்வபூதானிச
ஆத்மனி
ஸம்பச்யன் பிரம்ம பரமம் யாதி நான்
யேன ஹேதுநா !!

என்பது கைவல்லிய சுருதி.

'உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்'

என்பது திருவருட் பயன்.

ஆன்ம பாவனையை நமது நாண் முறை வாழ்வில் மேற்கொள்ள முடியும். பொழுதை நாம் பலவாறு பயனின்றிச் செலுத்துகின்றேம். பெரும் பயனற்ற பேச்சுக் கேள்வி காட்சிகளில் ஈடுபடாமல் ஆன்மாவில் செலுத்த வேண்டும். ஓய்வு நேரத்தில் நாம் ஆன்மாவைச் சிந்திக்கவேண்டும், நாம் நம்மை நினைக்கவேண்டும். பாவநாம் அகிலாம் த்யக்த்வா யச்சிஷ்டம் தன்மயோபவ என்பது மைத்திரேயோப நிடதம். உடம்பு முதலிய புறப் பொருட்களையும் இந்திரியாதிகளையும் நீக்கிவிட்டால் எஞ்சிநிற்பது ஆன்மா ஒன்றே. அதுவே அடையத்தக்கது அதையே நம் மனம் முற்றிலும் ஒடுங்குவது வரை அநுசந்திக்க வேண்டும். புறம்பே செல்லும் மனத்தை அகமுகமாகச் செலுத்திப் பழக வேண்டும். எத்தொழிலைச் செய்தாலும், நம்மை—ஆன்மாவை-ப்பற்றிய நினைவு நமக்கு வேண்டும். அதை அறிவது தான் தன்னையறிவதாம். ஆன்மாவை மறந்தவர்கள் தாம் தம்மை மறந்தவர்கள். இப்பான்மையில் உலகில் பெரும்பாலோரும் தம்மை மறந்து திரிகின்றவர்களே ஆகின்றார்கள். பிரமத்தை அறியாதவர்களைப் 'பிராந்தர்கள்' என்று சுருதி கூறுகின்றது. 'அத்விதீயம் பிரம்ம தத்வம் நஜாநந்தி யதா ததா பிராந்தா.' நமது தலைக்கொண்ட நோக்கம் ஒன்றே. அது ஆன்மாவை அறிவதே. எப்பொழுதும் ஆன்மாவிலே நினைவுடையாரது வாழ்வு ஆன்மீய வாழ்வேயாம். நாம் ஆன்மாவைக் கருதுந்தோறும், தியானிக்குந்தோறும் ஆன்ம சக்தியும் ஆன்ம ஞானவொளியும் நம்மிடத்து விளக்கம் அடைகின்றன. சின்னேரமாவது நாம் ஆன்மாவை நாடோறும் தியானித்து வருவோமாகில், அது கன்மம், பக்தி, யோகம் ஆகிய விதிகளுக்கு விளக்கந் தரும். சினம், பொறாமை, வாரம், இரக்கமின்மை முதலிய குற்றங்கள் சிறுகச்சிறுக நீங்கும். திரிபுடிகள் நீங்குங்கால், சமாதி நிலையுங் கைகூடும். அலையடங்கி மூழ்கக் கருத வேண்டா. அலைகள் அலறுக, குமுறுக, தத்துக, எற்றுக; இடையே நாமும் மூழ்குவோம். தோட்டி

முதல் மன்னன் வரை, பள்ளர் முதல் பார்ப் பார் வரை, சிறுவர் முதல் முதியவர் வரை ஆடவர் பெண்டிர் என்ற பாகுபாடின்றி ஆன்ம ஞானப் பயிற்சி யாவர்க்கும் உரியது. வேதாந்த மதத்தில் முதன் முதல் இறுதிவரை எத்தகைய வேற்றுமையும் இல்லை. உலகும் ஒன்றே, இறையும் ஒன்றே, உயிரும் ஒன்றே இறையும் ஒன்றே. இரண்டு என்பது வேதாந் தத்தில் எவ்விடத்தும் இல்லை. எல்லோரும் ஒரு பான்மையர், எல்லோரும் தோழர்கள் என்பது சீர்திருத்தக்காரர் மாற்றம். 'எல் லோரும் நாமே' என்பது தான் வேதாந்திக ளின் தேற்றம். பிறர் மாட்டு நமக்குத் தோன்றும் எல்லா வகை வெறுப்புக்களையும் நீக்கவேண்டும். காரி உமிழ்ந்தவள் வாய்க் குக் கற்கண்டிடும் மனப்பான்மை யார்க்கு உண்டாகுமோ அவரே வேதாந்தத்தின் முதற்படியில் நிற்குந் தகுதியுடையோர் ஆவர். பொறுமை தொடக்கத்தில்,-அமைதி —சாந்தி முடிவில்; இதற்கு இடையே தான் வேதாந்தம்.

அகங்காரமும் பற்றும்

'நான்' என்னும் நினைவு அகங்காரம் எனப்படும். ஆன்மாவைச் சுட்டிய 'நான்' என்னும் உணர்வு அகங்காரமே. எனவே, ஆன்மாவை 'நான்' என்று ஒவ்வொருவருங் கருதவேண்டுமென்பது ஆன்மாவைப் பிரித் துணரும் பொருட்டுக் கூறப்படுவதேயாம். 'நான்' என்ற சுட்டிறந்து 'தானாய்' விளங் குவதே ஆன்மானுபவமாம்.

ஆன்மாவின் கண் 'நான்' என்ற உணர்ச்சி மனம் தோன்றும் இடமாம். எனவே, அகங்காரம் நீங்கின், மனம் தானே ஒடுங்கி விடும். அகங்காரம் காரணமாக உண்டாகும் செருக்கை (மமதையை) அகங் காரம் என்பது உபசாரம். 'நான்' என்ற நினைவு நீங்கின், ஆன்மாவின் இருக்கை நன்கு விளங்கும். அகங்காரம் ஆன்மாவை மறைக் கும் மாசு என்பது அதன் காரியங்கள் விளை யுமிடத்து அறியப்படுகின்றது.

'யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்'

என்றார் தெய்வப் புலவர்.

அகங்காரத்தால் 'எனது' என்னும் பற் றுண்டாகின்றது. உண்மையாக 'யான்' என்பதும் இல்லை; 'எனது' என்பதும் இல்லை. இவ்விரண்டும் ஒரு பொருளாகிய இறை தான். இறையின் மாயை விளக் கத்தைக் கண்டு மயங்கி, இடையே நின்ற மனம் 'எனது' 'எனது' என்கின்றது. யாது என்னுடையது? யாது நம்முடையது? யாது எவருடையது? எல்லாம் ஒரு பொருளே.

பற்றவேண்டாததன்கண் பற்று, மயக்கத் தால் உண்டாவது. அப்பற்று நீக்கப்படுமா யின் மன வாழ்வு நீக்கமடையும். அது வீடு பேற்றுக்குக் காரணமாம். 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' 'அற்றது பற்றெனி லுற்றது வீடு' என்பவை எப்பொழுதும் நினைவில் இருக்கத் தக்கவை. 'மற்றுந் தொடர்ப்பாடெவன் கொல், பிறப்பறுக்க— லுற்றார்க் குடம்பு மிகை' என்றார் நாயனர். எப்பொருளைப் பற்றிய பற்று நீங்குமோ அப் பொருளால் வருந்துன்பம் நமக்கு உண்டாவ தில்லை. 'யாதனின் யாதனி னீங்கியா னோதல் —அதனி னதனி னிலன்' என்கின்றார் நாய னர். அன்றியும், தெய்வப் புலவர், 'தலைப் பட்டார் தீரத் துறந்தார் மயங்கி—வலைப்பட் டார் மற்றையவர்' எனப் பற்றைப் பிறவி யாகிய வலையிற் படுவதற்குக் காரணமாக வும் கூறுவது ஆராயத்தக்கது.

பற்றத் தக்கது உலக மன்று, பற்றத் தக் கது பற்றற்ற பரம்பொருளே. 'பற்றுக பற் றற்றான்பற்றினை' என்றார் பொய்யா மொழி யார்.

> தேச கால வஸ்து பரிச்சேத
> ராஹித்ய சின்மாத்ர ஸ்வரூபம் கிரா ஹ்யம்
> ஸ்வஸ்ரூப வ்யதிரிக்த மாயாமய புத் தீந்திரியாதி கோசரம்
> ஜகத் ஸத்யத்வ சிந்தனம் அக்ராஹ்யம்

என்று சர்வசாரோபநிடதங் கூறுகின்றது. உலகை உண்மை என்று கருதுவதனால் அதன் கண் பற்றுத் தோன்றுகிறது. அஃது ஓர் மாயைத் தோற்றம் என்பது புலனாகுமா னல், காமாதிகளாகிய பற்றுக்கள் கடுக நீங்கிவிடும்.

"ஒரு பொழுதும் வாழ்பவ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

என்னுங் குறட்பாவைச் சிறப்பாகக் கருது தல் வேண்டும்.

பிறவி நோக்கம்

நமது பிறவியின் நோக்கம் நமது இயற்கை வடிவை நாம் அடைவதே. அதற்காகவே, 'பிறவி' எனப்படுஞ் சிறுபொழுது நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதை வாளா கழித்துவிடின், நமது நோக்கத்தை நாம் இழந்தவரே யாவோம். ஆன்மா என்

னும் மணியைப் பிறவிக்கடலில் வீழ்த்தியவ ராவோம்.

தன்னையறிந்து தலைவனையறியும் பொழுது தான் ஒருவனுடைய துன்பங்கள் நீங்கும். 'வேண்டுதல் வேண்டிமை யிலானடி சேர்ந் தார்க்—கியாண்டு மிடும்பை யில'. நமது மனக் கவலை நீங்குவதற்கு ஒரு வழி தான் உண்டு. அதாவது பரம்பொருளைச் சார்தல். 'தனக்குவமை யில்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லால்—மனக்கவலை மாற்ற லரிது' ஆராய்ச்சி முயற்சி உபாயங்களால் மனக் கவலை தீர்வதில்லை. மனக்கவலையாவது மனத் தின் காரியமாக நிகழும் பிறவியேயன்றி வேறில்லை. நமது வினைகள் நீங்குவதற்கு இறைவனையடையும் ஞானத்தையே யடைய வேண்டும். 'இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்—பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு'. பரம்பொருளைச் சார்வதே பிறவியை நீக்குவதற்கு நெறி. வேறு எந்நெறியும் அதற்கு இல்லை. 'அறவாழி யந்தணன் ருள் சேர்ந்தார்க் கல்லால்—பிறவாழி நீந்தலரிது' 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்—இறைவனடி சேரா தார்' நாம் நீடு வாழ்வ தற்கு எவ்வகைக் கற்பங்களும் பயன்பட மாட்டா. பரம்பொருளின் வழி நின்று அதனையடைவதே நீடுவாழ்வதற்கு நெறியா கும்.

'பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொ
ழுக்க்
நெறி நின்ருர் நீடு வாழ்வார்'
'மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நிடுவாழ் வார்'

நீடுவாழ்தலாவது பிறவாது இறவாது வீடு பெற்று வாழ்வதே.

வாழ்க்கையில் ஒவ்வொருவர்க்கு ஒவ் வொரு நோக்கம் இருக்கிறது. கல்வி, அறிவு, செல்வம், புகழ், உயர் நிலை முதலியன எல் லாம் சிறந்த நோக்கங்களே. சிறையிலிருந்து எய்தப்படுஞ் சிறப்பெல்லாம் பெரும் பய னற்றவை. அதைவிட்டு நீங்குமிடத்து அவற் ருல் வருவதொரு பயன் யாது? சிறை வாழ் வார்க்கு அச் சிறையை விட்டு நீங்குவதே தலை சிறந்த நோக்கமாக இருக்கும். பிறவிச் சிறையில் இருக்கும் நமக்குப் பிறவியை விட்டு நீங்குவதே இறுதி நோக்கமாக இருக்க வேண்டும். மற்றைய நோக்கங்கள் அந்த நோக்கத்துக்கு இடையூறுகளாக இருக்கலா காது. அந்நோக்கத்தை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது.

நாம் எல்லோரும் ஓரிடத்தையே எதிர் நோக்கி வாழ்கின்ருேம். சிலர் அதனை வெளிப் படையாக உணர்வதில்லை. அவ்விடம் வேறு இடத்தில் இல்லை; நமக்குள்ளேயே இருக்கி றது. அவ்விடத்தை நாம் ஒருதலையாக அடைய வேண்டும். நமது குறுகிய வாழ்வு அதற்காகவே அருளப்பட்டிருக்குறது. வாழ் வில் ஒவ்வொரு நிமிடமும் நினைக்க முடியாத விலை மதிப்புடையது. இழந்து விட்டால் எவ் வுபாயத்தாலும் மீட்டுக்கொள்ள இயலாதது. பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நாம் அதை நன்முறையிற் பயன்படுத்தி வீடு பேற்றை அடைவோமாக.

தானீ, நானீ, தேவிகள்

டி. ஆர். ராமநாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

நல்ல குளிர் காலம். சீமான், எளியவர் எனப்பாகுபாடின்றி இயற்கையன்னை ஆட்சி புரிந்தாள். கம்பளங்களும் போர்வைகளும் பயனற்றுப் போயின. அக்பர் பெரிய மன் னன்தான். பாரதநாடு, மன்னன் ஏவலைச் சிரத்தால் மதித்து நடத்தி வந்தது. ஆயினும் உடலிற்குள் ஊடுருவிச் செல்லும் குளிரின் அதிர்ச்சியினின்று மன்னன் மீள முடியாது வருந்தினன். அருகிலிருந்த தான்ஸேன் மீது மன்னனின் பார்வை பாய்ந்தது. திடீரென ஓரெண்ணம் தோன்றியது. 'கலைமகளின் அருளினல் அரிய பெரிய வெற்றி பெற்ற சங்கீதசாஸதிரத்தில் உயர்ந்த தேர்ச்சிபெற்ற குயிலினையும் வெல்லும் இனிய குரலைப் பெற்ற தான்ஸேனின் உதவியினல் அன்று குளிரை வெல்லலாம்' என்று எண்ணினர்.

'சிற்சில ராகங்களைப் பாடினல் சிற்சில வெற்றிகளைப் பெறலாம். தீபக ராகத்தைப் பாடினல் குளிர் மறையுமாறு வெப்பம் திக ழும்' என்றும் பெரியோரிடம் கேட்டறிந்தி ருந்த அக்பர் மன்னன் தீபகராகம் பாடு மாறு தான்ஸேனுக்கு உத்திரவிட்டுவிட்டார். அந்த ராகத்தைப் பாடுவது அவ்வளவு எளி

தல்ல. வெளியில் வெப்பத்தை ஏற்படுத்து கையில் உள்ளமும் வெப்பம் தாங்காது வருந் தும். ஆதலால் தான்ஸேன் உள்ளம் வருந் திற்று. மன்னன் ஏவுதலை மதிக்காமலிருக்க முடியுமா? வேறுவழியின்றித் தீபக ராகத் தைத் தான்ஸேன் பாடினார். எங்கும் வெப் பம் பரவவே குளிர் மறைந்தொழிந்தது. ஆனால் தான்ஸேன் மட்டும் வெப்பம் தாங் காது வருந்தினார்.

நாட்கள் கழிந்தன. வெப்பம் குறைந்த பாடில்லை. தான்ஸேனின் உடல் நலம் சீர் கெட்டது. கூர்ஜர நாட்டிற்குச் சென்று சபர்மதியாற்றின் கரையில் சில நாட்களைக் கழித்து உடல் நலத்தைப் பெற்றுத் திரும்பி வருவதாக அக்பர் மன்னனிடம் வேண்டி னார். அனுமதி கிடைத்தது. தான்ஸேனும் சென்றார். அந்நாட்களில் கூர்ஜர நாட்டை யும் தன் ஆட்சிக்குள் கொண்டுவர அக்பர் திட்டமிட்டிருந்தார். ஆதலால் கூர்ஜர நாட் டினர் கவலைக்காளகியிருந்தனர். மங்கைக ளெல்லாம் கதிரவன் தோன்று முன்பே ஆற் றிற்குச் சென்று நீராடி, நீரை எடுத்து வரு வது முறையாயிருந்தது.

தான்ஸேன் தங்கியிருந்த கிராமத்தில் இரு சகோதரிகள் இருந்தனர். பெரியவள் தானீ தேவி, சிறியவள் நானீதேவி. இருவரும் தற் செயலாய் நீராட ஆற்றிற்கு வந்த நேரத்தில் தான்ஸேனைக் கண்டனர். உடனே தானீ தேவி 'தீபக ராகம் பாடியதனால் இவர் நோயுற்றிருக்கிறார்' என நானீயிடம் கூறி னாள்.

தான்ஸேனும் அதைக் கேட்டு விட்டார். அவர்கள் நீரெடுத்துத் திரும்புகையில் அவர் களைச் சந்தித்தார். 'சகோதரிகளே' என அழைத்துத் தன் நோயைப் போக்குமாறு வேண்டினார்.

முதலில் அயலானுடன் பேசுவதற்கு நாணிய அச்சோதரிகள் கருணை மேலீட்டி னால் அவரை இல்லத்திற்கு அழைத்துச் சென்று பன்முறைகள் மேக ராகத்தைப் பாடி அவர் வெப்ப நோயைக் குறையச் செய்தனர். தான்ஸேனின் உள்ளெரிச்சல் முற்றிலும் மறைந்தது. தம் நன்றியைத் தான்ஸேன் வெளியிட்டார். 'எக் காரணங் கொண்டும் அச்செய்தியை வெளியிடுவ தில்லை' என்று அவர்களிடம் ஆணையிட்டு அக்பர் மன்னனிடம் சென்றார்.

நோயற்றுத் திரும்பிய தான்ஸேனைக் கண்டு அக்பர் மிகவும் மகிழ்ந்தார். மேக ராகத் தைப் பாடியமையினாலேயே தான்ஸேன் உடல் நலம் பெற்றிருக்க வேண்டும் என்பது அக்பருக்கு நன்றாகத் தெரியும். அந்த ராகத்தை எப்படியாவது பாடிக் கேட்க வேண்டும் என்ற தன் அவாவை வெளியிட் டார்.

தான்ஸேனுக்கு அந்த ராகத்தைப் பாட முடியாது, பாடுபவரைச் சபைக்கு அழைத்து வருவதும் முடியாத செயல். ஆணையை மீற முடியாது சில நாட்கள் பேசாதிருந்தார். ஆனால் எவ்வளவு நாட்கள்தான் அரசரின் விருப்பம் நிறைவேறாதிருக்க முடியும்?

வேறு வழியின்றித் தான்ஸேன் அக்பரை அழைத்துக் கொண்டு சபர்மதி நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். வழக்கம் போல் தானீயும் நானீயும் சபர்மதிக் கரைக்கு நீராட வந்த னர். விரைவில் தான்ஸேனை அறிந்து கொண்ட அவர்கள் அருகில் இருந்தவர் அக் பராகத்தான் இருக்கவேண்டும் என்றும் அறிந்து கொண்டனர். அவர்கள் சொல் லொணாச் சினத்தைப் பெற்றனர்.

அவர்கள் திரும்புகையில் மன்னரே எதிரில் நின்றார். தலைகுனிந்து பணிவே உருக் கொண்டவராய் மேக ராகத்தைப் பாடுமாறு வேண்டினார்.

மன்னன் பணிவுடன் கெஞ்சி, அன்பொழு கப் பேசித், தூய உள்ளத்துடன் வேண்டுகை யில் அச் சகோதரிகள் எவ்வாறு மறுக்க முடியும்? தம் தலைவிதியையும் முடிவையும் அவர்கள் ஒருவாறு தீர்மானித்துக் கொண்ட னர். 'ஆகட்டும்' என்றும் ஏற்றுக் கொண் டனர்.

குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பொது மண்ட பத்தில் அவர்கள் இருவரும் மேக ராகத்தைப் பாடினர். அக்பர் மிகவும் மகிழ்ந்தார். இரு வருடைய கணவன்மார்கட்கும் இரு ஜமீன் களைக் கொடுத்தார்.

தானீயும் நானீயும் சங்கீதத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றவரல்ல. உயர்ந்த கற்பரசி களுமாயிருந்தனர். தம் கற்பைப் பாதுகாக்க இருவரும் சூரியகத்தியை இடுப்பில் மறைத்து வைத்துக் கொண்டிருந்தனர். அக்பருக் கெதிரில் பாடிவிட்டுத் திரும்புகையில் இரு வரும் தம் தம் வாளை இடுப்பிலிருந்து எடுத்த னர். ஒரே நேரத்தில் அவை வானில் ஒளித் தன. அடுத்த நிமிடத்தில் ஒருத்தியின் வாள் மற்றொருத்தியின் கழுத்தில் பாய்ந்தது. இரு தலைகளும் தரையில் உருண்டன. உதிரம் எங்கும் பெருகிற்று. இதைக் கண்டதும் தான்ஸேன் உணர்ச்சியிழந்து தரையிற் சாய்ந்தார். எவருக்கும் என்றைக்கும் கிட்

டாத ஒரு அரும்பொருள் கிடைத்தும் தான்ஸேன் அதை இழந்தார். தன்னால்தான் அவர்கள் இறந்தனர் என்பதை எண்ணிய தான்ஸேன், கூரிய அம்பு உடலில் பாய்ந்து துடிக்கும் பறவையைப் போல் துடித்தார்.

தானீ நானீ தேவிகளின் கணவர்கள் செய்தியை அறிந்து வந்து சேர்ந்தனர். அக்பர் மன்னர் அவர்கள் முன்னிலையில் நீரைப்பெருக்கும் கண்களுடன் தலைகுனிந்த வண்ணம் வீற்றிருந்தார்.

இருவரும் இல்லங்களினின்று கிளம்புகையிலேயே ஆவியைத் துறக்கத் துணிந்து கடிதத்தை எழுதித் தம் தம் இடுப்பில் வைத்துக் கொண்டிருந்தனர்.

அக் கடிதங்களின் வாசகம் பின்வருமாறு இருந்தது.

'உயிரினும் உயர்ந்த அன்பா'

வேறு விதியின்றித் தாம் இல்லாதிருக்கையில் முஸ்லீம் சக்கிரவர்த்தியின் முன்னிலையில் பொது மண்டபத்தில் நாங்கள் இருவரும் பாடுமாறு நேரிட்டது. நாங்கள் தூய்மை பெற்றவர்கள். எங்கள் கற்பு நன்கு பாதுகாக்கப் பட்டிருக்கிறது. மன்னனும் எங்களைப் புதல்விகளைப் போலவே கருதி நடந்து கொண்டார். ஆயினும் நாங்கள் கற்பரசிகளின் முறையினின்று சிறிது நழுவியவர்களாகி விட்டோம். உங்களுடைய தூய்மை பெற்ற மடியில் எங்களுக்கு இனி இடமில்லை. ஆதலால் இக் கேடுற்ற உடலை ஒழித்துவிட உறுதி கொண்டு விட்டோம். இனி மேலுலகில் தம்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

இங்ஙனம்
தம் திருவடிகளிற் பணியாற்றும்
தானீ—நானீ—

அந்தத் தூய மங்கையின் நினைவு என்றென்றும் மங்காதிருக்க வேண்டும் எனக் கருதிய மன்னன் அதே இடத்தில் ஓர் சங்கீதப் பள்ளியை நிறுவினான்.

இவ்வளவு ஆண்டுகள் கழிந்தும் அக் கட்டிடத்தின் இடிந்த சில பகுதிகள் ஆமதாபாத்தில் இன்றும் காணப்படுகின்றன.

தான்ஸேன் தானீ தேவியையும் நானீ தேவியையும் வாழ் நாட்கள் முழுதும் மறக்கவே முடியவில்லை. அவ்விருவரையும் தம் சகோதரிகளாகவே கருதினார்.

அவர்களுடைய நினைவு என்றும் சங்கீத உலகத்தில் அழியக் கூடாதெனக் கருதிய அவர் ஸ்வரம் பாடும்போதெல்லாம் ஓம் என்று தொடங்கும் இடங்களில் 'தோம்; தானா, நானா,' என்று பாடுமாறு ஏற்பாடு செய்துவிட்டார்.

அதை இன்றும் சங்கீத உலகில் உணரலாம்.

செய்தி

கமார்ப்புகூரில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோவில் பிரதிஷ்டை

சென்ற மே மாசம் 11-ம் தேதியன்று ஸ்ரீராமகிருஷ்ணப் பெருமான் திருக்கோயிற் பிரதிஷ்டை நடந்தபோது கமார்ப்புகூர் என்னும் சிற்றூர் இதுவரை கண்டிராத விழாச் சிறப்பையும் மனக் களிப்பையும் அன்பர்களின் கூட்டத்தையும் பெற்று, நக்ஷத்திரங்களின் நடுவே நாயகமாக விளங்கும் முழுமதி போலப் பொலிந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் மண்ணுலகில் அவதரித்தருளிய அதே தூய இடத்திலே இக் கோயில் கட்டப்பட்டுள்ளது ஒரு பெரும் வாய்ப்பாயிற்று.

முழுதும் மணற்கல்லாலும் (மணற்பாங்கான பாறையாலும்) சலவைக் கல்லாலும் இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கட்டிட அமைப்பு முறை மிக எளிதாகவும் அழகாகவும் உள்ளது; சூழ்ப்புறத்திலுள்ள கிராமப் பாங்கு மாறாதபடி, அதற்கு இசையுமாறு ஒரு சிறு கட்டிடமாகவே அது இயற்றப்பட்டது. சாந்தி நிகேதனத்துப் புகழ்பெற்றுத் திகழும் ஸ்ரீநந்தலால் போஸ் என்னும் சித்திரக் கலைச் செல்வர் கட்டிட அமைப்பிற்குரிய படத்தை வரைந்தளித்தார். ஸ்ரீராமகிருஷ்ணரது பிறப்பு சம்பந்தமான இரு முக்கிய நிகழ்ச்சிகளைப் பலரும் மறக்காவண்ணம் அவற்றைக் கல்லிலே சித்திரமாகப் பொறித்து வைத்துள்ளனர். அந்நிகழ்ச்சிகளாவன: (1) இப்பெருமான் பிறந்தது நெல்லைப் புழுக்கிக் குத்தும் ஓர் அறையிலேயாதலின், அதை நினைவிலிருத்துதற்காகக் கோயிலில் உள்ள திருப்பீடத்திலே (சலவைக் கல்லிலே) நெற்குத்தும் யந்திரத்தையும் அடுப்பையும் வரைந்துள்ளனர். (2) ஸ்ரீராமகிருஷ்ணரது அன்னையார் சந்திராதேவியார் தமது வீட்டுத் திண்ணையில் ஒரு நாள் அமர்ந்திருந்தபோது, தெரு நடுவே சற்றுத் தொலையில் இருந்த கோயிலிலுள்ள சிவலிங்கத்தைப் பார்த்ததும், அங்கிருந்து தெய்விக ஜோதி வெள்ளம் ஒன்று பெருகிவந்து அம்மையார் மீது பாய்ந்து, அவரை மெய்ம்மறக்கச் செய்தது; அது முதலே அவர்

கர்ப்பவதியானார். இந்த அரும்பெரும் நிகழ்ச்சியைக் குறிப்பதற்காகவே கோயிலின் உச்சியில் ஒரு சிவலிங்கம் அமைக்கப் பட்டுள்ளது. கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானது திருமேனி இரண்டரையடி உயரமுள்ளதாய், பூவுலகிலே தோன்றிய இடத்திலே சலவைக் கல்லால் அமைந்து, படங்களிலே யாம் காணும் திருவுருவத்தை வியத்தகும் அளவிலே ஒத்திருக்கின்றது.

இவ்விழாவிற்கென அக்கிராமத்திலே ஏற்பாடுகள் மிகவிரைவாகவும் செவ்வையாகவும், முதிர்ந்த அனுபவமுடைய துறவிகளின் போதனைக் கிணங்கப் பல மாதங்களாக நடைபெற்றுவந்தன. அண்டையிலும் பம்பாய் சென்னை மாகாணங்களில் வெகு தொலையிலும் அன்பர்கள் கமார்புகூர்க்குள்ளே பெருகின வண்ணமாயிருந்தனர். மே மாதம் 10-ம் தேதிக்குள் யாத்திரீகர்கட்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகள் யாவும் சுமாராக நிரம்பி விட்டன.

பிரதிஷ்டை நாளிற்கு முந்திய நாளில் காசியிலிருந்து இதற்கெனவே வரவழைக்கப்பட்டிருந்த மூன்று பண்டிதர்கள் உதவி செய்ய, தொடக்கத்தில் செய்யவேண்டிய பூஜை கமார்புகூரில் ஆரம்பித்தது. மறுநாட் காலையில் சாதுக்களும் பிரம்மசாரிகளும் அன்பர்களும் கணக்காக ஐந்து மணிக்கே கூடினார்கள்; அவர்களிற் பலர் முதன் முதலில் கங்கையின்—புனித நீரை ஏந்தி ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஸ்ரீராமகிருஷ்ண மடம்—சங்கம் இரண்டிற்கும் உபதலைவரான ஸ்ரீமத் சுவாமி சங்கரானந்தஜி அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணப் பெருமானது திருமேனியின் சேஷம் அடங்கிய ஆத்மா ராமகூடத்தைக் கையில் ஏந்திவரப், பின்னால் சுவாமி விசுத்தாநந்தர், சுவாமி யதீஸ்வராநந்தர், சுவாமி ஆத்மப் பிரகாசாநந்தர் மூவரும் முறையே ஸ்ரீராமகிருஷ்ணர் தூய அம்மையார் சுவாமி விவேகாநந்தர் என்பவர்களின் படங்களை எழுந்தருளப் பண்ணிவந்தனர். இக்கூட்டத்திற்கு முன்னே கீர்த்தனம் பஜனை செய்வோரின் திரள் ஒன்று சென்றது. அனைவரும் புதுக் கோயிலை மும்முறை வலம் வரும் போதே 'ஜே ஸ்ரீகுருமஹாராஜ்ஜிகி ஜே' 'ஜே மஹாமாயிகி ஜே' 'ஜே ஸ்ரீ சுவாமிஜி மஹராஜிக்கு ஜே' என்ற கோஷத்தை எழுப்பிவந்தனர். வலம் வந்தபின் கோயிலுக்குட் புகுந்து, ஆத்மா ராம கூடத்தையும் மூன்று படங்களையும் பிரதிஷ்டை செய்தனர். ஸ்ரீமத் சுவாமி சங்கரானந்தஜி கோயிலைத் திறந்து வைத்தனர். சற்றுநேரத்திற்குப் பின் புதிய திருவுருவத்திற்கு முறையாகப் பூஜை இயற்றப்பட்டது: கோயிலுக்கு அருகாமையிலே புதிதாய் அமைக்கப்பட்ட யாகசாலையில் பூஜையும் ஹோமமும் நடைபெறறன. மாலை 2 மணிக்கு யாவும் முடிவுபெற்றன.

பிரதிஷ்டைக் கிரியைகள் முடிந்தவுடன், ஒரு மைல் நீளமுள்ள ஊர்வலம் ஒன்று கமார்புகூரிலிருந்து மாணிக்க ராஜரின் மாந்தோப்பை நோக்கிச் சென்றது; இங்கேதான் ஸ்ரீராமகிருஷ்ணரது இளம் பருவத்து அவரும் தோழருமாக நாடகங்கள் நடிக்கப் பழகினார்கள். வெயில் மிகக் கடுமையாயிருந்தும் மக்களின் ஊக்கம் இணையற்றதாயிற்று. பாதையின் இருமருங்கிலும் அன்பர்கள் வரிசையாக நிற்க, சாதுக்கள் (ஸ்ரீராமகிருஷ்ணர், சாரதாதேவியார், சுவாமி விவேகாநந்தர் ஆகிய) மூவரது படங்களையும் எழுந்தருளப் பண்ணினர். பஜனைப் பாடல்களையும் கீர்த்தனங்களையும் பாடிக்கொண்டு பாட்டுக்கிசைய ஆடிக்கொண்டும் வந்த கூட்டமும், கிராமமெங்கும் 'ஸ்ரீகுருமஹாராஜ்ஜிகி ஜே' என்ற எதிரொலியின் முழக்கமும், ஆடல் பாடல்களிற் கலந்து கொண்ட அன்பர் ஈட்டமும் (கூட்டமும்,) அனைத்திற்கும் மேலாக, கிராம மனப்பாங்குக்கு ஏற்ற எளிமையும், அன்பர்களின் மனதில் ஸ்ரீராமகிருஷ்ணரது இளம் பருவ வாழ்க்கையை மனக்கண் முன் எழச் செய்தன. இதற்கிடையே, அதேமாதிரி வேறோர் ஊர்வலம் அதிகாலையிலே ஜைராம்பாடியினின்றும் புறப்பட்டுக் கமார்புகூரை நோக்கிப் புறப்பட்டு வரலாயிற்று. ஊர்வலத்திற்கு முன்னால் ஒரு கூட்டத்தார் கொட்டுகளை முழக்கிக் கொண்டே கம்பு வீச்சோடும், ஆடலோடும் சென்று கொண்டிருந்தனர். இரு ஊர்வலங்களும் மாந்தோப்பிலே ஒன்றுகூடி, கமார்ப்புகூர் கிராமத்தை வலப்பக்கமாகச் சுற்றிவந்து, ஸ்ரீராமகிருஷ்ணரது திருக்கோயிலைச் சார்ந்தன. எங்கும் விழாக்களி மிகுந்திருந்தது.

பிற்பகல் 1 மணிக்கு அடியார்கட்குப் பிரசாதம் வழங்கத் தொடங்கி மாலை 4 மணிக்கு அது முடிவுற்றது. ஒலிப்பெருக்கி மூலம் வேதபாராயணமும், இராமகிருஷ்ண சரித்திரம் வாசித்தலும், சங்கிதமும், பிறவும் எங்கணும் பரப்பப்பட்டன. மாலையில் யாத்திரிகர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரது வாழ்க்கையொடு சம்பந்தப்பட்ட எல்லா முக்கிய தலங்களையும் காணச் சென்றனர். மாணிக்க ராஜரது மாந்தோப்பும், தனி (கம்மாள) அம்மையாரது வீடும், குயவர் ஸ்ரீநிவாஸரது இல்லமும், லாஹா குடும்பத்தாரது மாளிகையும், வீட்டிற்கு அருகேயிருந்த சிவபெருமான் கோயிலும்—இவையே பெரும்பாலரால் விரும்பிக் காணப்பெற்றன. மயானத்தின் அருகே ஓர் இடத்தில் கேதார யாத்திரை பதரிகாச்சிரம யாத்திரை சம்பந்தமான அசையும் படக் காட்சிகள் காட்டப்பட்டன; அவை பலர்க்கு இன்பத்தையும் பக்தியையும் அளித்தன. இரவு 9 மணிக்கு ஸ்ரீ சைதன்ய தேவரது அவதாரச் செயல்களைத் திரைகளின்றி நாடகமாக நடித்துக் காட்டலாகிய 'ஜாத்ரா' எனும் காட்சி தொடங்கிற்று. கோயிலுக்கு எதிரே இதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட பெரிய பந்தலிலும் அதையொட்டிய பல இடங்களிலும் ஜனங்கள் ஏராளமாகத் திரண்டனர்; எல்லாப் பாதைகளும் மக்களால் அடைபட்டன, இரவு இரண்டரைமணிக்கு ஜாத்ரா முடிவுபெற்றது. மே மாதம் 12-ம் தேதி இரவன்று இறுதியில் இயற்றவேண்டிய பூஜைகள் நடைபெற்றன. அன்றிரவும் 'நிமை ஸன்னியாஸ்' என்னும் ஜாத்ரா நிகழ்ந்தது. விழாக் காட்சிகள்

பலவற்றையும் படச்சுருளிற் படமெடுத்தனர்; படம்பிடிக்கும் பெட்டியைக் கொண்டும் பலர் படம் பிடித்தனர்.

விழாக் காண வந்தார்க்கு இடமளித்தற்கான ஏற்பாடுகள் கங்காலில் கும்பமேலாவுக்காகச் செய்திருந்தவை போன்றன. சாதுகட்கும் அடியார்கட்கும் ஆக 12 கொட்டகைகள் போடப்பட்டன; ஒவ்வொன்றும் 100 பேர்க்கு இடமளிக்கக் கூடிய 6 பெருங் கொட்டகைகளும், ஒவ்வொன்றும் 60 பேர்க்கு இடமளிக்கக் கூடிய 6 சிறு கொட்டகைகளும் அமைக்கப்பட்டன. 200 சாதுக்களும், 800 அடியார்களும் (ஆண்களும் பெண்களும்) இவ்வாறு இடவசதி பெற்றனர். திறந்த வெளியிலே ஒரு பெருங் கூடாரம் அமைத்து, அங்கே ஆயிரம் பேர்க்கு மேலே உணவளிக்க ஏற்பாடு செய்தனர். குடிக்கவும் குளிக்கவும் நீர் வசதி அளித்தற்பொருட்டு 12-க்கு மேல் குழாய்க் கிணறுகளும், திருமடைப்பள்ளிக்கென ஒரு 'எண்ணெய் பம்பும்' ஒரு கைப் 'பம்பும்' அமைக்கப்பட்டன. 'ஹர்ரிகேன்' ராந்தல்களும், பெட்ரொமக்ஸ் விளக்குகளும் இருந்ததுமன்றி, மின்சார யந்திரம் ஒன்று (டைனமோ) மின்சார விளக்குகள் மூலம் ஒளியைக் கோயிலுக்கு எதிரேயுள்ள பந்தலிலும் முக்கிய நடைபாதைகளிலும் சொரிந்து கொண்டிருந்தது. (மின்சார விளக்குகளை அக்கிராம மக்கள் முதன் முறை கண்டது இப்போது தான் போலும்) உணவளிக்கும் ஏற்பாடுகள் காலம் தவறாது ஒழுங்காக நடைபெற்றன. 11-ம் தேதியன்று 7500 பேர் ஆசிரமத்தில் உணவருந்தினர். பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்த கூட்டம் முக்கியமான தருணத்திலே 15000 க்குக் குறையாதிருந்தது என்று நிதானமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒலிபெருக்கி அமைப்பு கூட்டத்தினர்க்கு அப்போதைக்கப்போது நிகழ்ச்சிகளை அறிவிக்கவும் காணமற்போன மக்களையும் பொருள்களையும் பற்றிய தகவல்களை வேண்டியவர்க்கு அறிவித்து, அவற்றை உரியோர்க்கு மீண்டும் அளிக்கவும், ஞானப் பிரசங்கங்கள் புரியவும் பயன்பட்டது. தொண்டர்கள் பலர் தாமாக முன்வந்து பற்பல துறைகளிலும் பணிபுரிந்ததும் இங்கு மகிழ்ச்சியோடும் நன்றியோடும் குறிப்பிடத் தக்கதாகும்.

புதிய தலைவரின் தேர்தல்

சென்ற ஜூன்மாசம் 19-ம் தேதியன்று ஸ்ரீமத் சுவாமி சங்கரானந்தஜி மஹராஜ் அகில இராமகிருஷ்ண மடம்—சங்கம் இரண்டிற்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தற்போது அவர்க்கு வயது 70. சுவாமிகள் 1947-ம் ஆண்டு முதல் உபதலைவர் பதவியைத் தாங்கி வந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க ஸேவாசிரமம், ரங்கூன்

ரங்கூனிலுள்ள இராமகிருஷ்ண சங்க ஸேவாசிரமத்தின் நிர்வாகக் கழகத்தார் 1950-ம் ஆண்டு அறிக்கையை (போருக்குப்பின் மீண்டும் தொடங்கப்பட்டு நான்காவது ஆண்டு பூர்த்தியாக அவ்வாண்டிற்குரிய அறிக்கையை) வெளியிட்டுள்ளார். அதிற்கண்ட முக்கிய விவரங்களாவன:

1950-ம் ஆண்டு டிசம்பர் முதல் படுக்கைகள் பெண்கட்கு 37-ம், ஆண்கட்கு 78-ம் ஆக 115 ஆயின. ஆஸ்பத்திரியில் ரண வைத்தியப் பகுதி மருத்துவப் பகுதி, கண்ணோய்ப் பகுதி, மேகரோகப் பகுதி எனும் நான்கு பகுதிகள் உள்ளன. அறிக்கையாண்டில் 2361 ஆண்களும், 935 பெண்களும், 72 குழந்தைகளும்—மெத்தம் 3368 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். இவர்கள் ஆஸ்பத்திரியில் உள்ளே தங்கி சிகிச்சை பெற்றவர்.

வெளி சிகிச்சை இலகாவில் 1 பொது ஆண்கள் 2 பொதுப் பெண்கள் குழந்தைகள் 3 பல் நோய் 4 கண்ணோய் 5 காது—மூக்கு—தொண்டை—மேகரோகம் எனும் 6 பகுதிகள் உள்ளன. இவைகளிற் சிகிச்சை பெற்றோர் 191373 பேர். ஊதாப்பின்—அலைகள்—வீசும் அனல் முதலிய முறைகளால் 1202 பேர் சிகிச்சை பெற்றனர். இவ்விலாகா ஒரு புதிய தனிக்கட்டத்திற்கு மாற்றப்பட்டது; ஜூன் 1950 அதைத் திறந்து வைத்தவர் மாட்சியுற்ற ஸ்ரீ ஜவஹர்லால் நேரு என்பார். புற்று நோய் முதலிய தீராத நோய்களுக்கு 'ரேடியம்—சிகிச்சை' அளித்தற்குரிய வசதிகள் ஆஸ்பத்திரியில் அமைந்துள்ளன; இத்துறையில் சிகிச்சை பெற்றோரின் தொகை 75. மருத்துவச் சோதனைக் களத்தில் ஒரு பெரும் மருத்துவரது உதவியால், சிறு நீர் மலம் உதிரம் உமிழ்நீர் புண்களின் மேற் பொருக்கு இவை ஆராயப்பட்டன; இவ்வாறு 5480 ஆராய்ச்சிகள் நடைபெற்றன. 'எக்ஸ்ரே' படம் பிடிக்கும் கருவி மூலமாக 880 நோயாளிகள் பயனடைந்தனர்; ஏழைப் பிணியாளர்க்கு இலவசமாகவோ குறைந்த விலைக்கோ அவ்வுதவி யளிக்கப்பட்டது. 1950 அக்டோபர் முதல் 8 மாணவர்கள் 'கம்பௌண்டர்' வேலைக்குப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மொத்தப் பொதுச் செலவு ஆண்டுக்கு ரூ 242580—3—0; வரவு ரூ 232190—10—0; ஆக அதிகச் செலவு ரூ 10399—9—0. மாத வரவுகளும் நன்கொடைகளும் தரும உண்டியல் வரவும் ஊக்கத்திற்கு இடமாயின. வரவுத் தொகையில் கூடுதல் உண்டாதற்கும், பெரும்பாலும் ஸ்ரீமான் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஸேவாசிரமத்திற்கு விஜயம் செய்ததும், தாமே ரூ 2500 நன்கொடை யளித்ததும் காரணங்களாயின. முற்றிலும் தரும நிலையமாதலின், அதன் பணி பரோபகாரச் சிந்தனையுடைய பொது மக்களின் உதாரத்தையும் ஆதரவையும் பொறுத்ததாகின்றது என்பது வெள்ப்படை. ஆஸ்பத்திரிக்குரிய முக்கியத் தேவைகளாவன: 1. 30 படுக்கைகள் கொண்ட ஒரு கட்டிடத்திற்கு ரூ 20,000; 2. பிரசவ மாதர்க்கு ஓர் கட்டிடத்திற்கு ரூ 50,000; 3. குழந்தைகட்கென ஒரு கட்டிடத்திற்கு ரூ 30,000.

அன்பர்கள் அளிப்பது சிறு தொகையாயினும் பெருந் தொகையாயினும், ரொக்கமாயினும் வேறு பொருளாயினும், யாவும் "ரங்கூன், ராமகிருஷ்ண மிஷன் ஸேவாசிரமம் காரியதரிசி" அவர்களால் நன்றியோடு ஏற்றுக் கொள்ளப்படும்.